தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

ஒற்றைத் தமிழ்மகன் உள்ளவரை, உள்ளத்தே
அற்றைத் தமிழ்த்தாய் ஆட்சி புரியும்வரை,
எற்றைக்கும், எந்நிலத்தும், எந்த நிலையினிலும்
மற்றை இனத்தார்க்கே மண்டியிடான்; மண்டியிட்டால்
பெற்றவர்மேல் ஐயம்; பிறப்பின்மேல் ஐயமெனச்
சற்றும் தயக்கமின்றிச் சாற்று!



ரூ 0 50 காசு

சுவடி க; ஓலை: உ. மீனம் (பங்குனி) கககக

நமக்குவந்த மடல்கள்-

O தனித் தமிழ்த் தலைவா! தங்களது இதழ் காலம் தாழ்ந்து வரக் கண்டு தவித்தேன்; தாளாத் துயருற்றேன். தனிப் பெரும் தமிழ்ப்பணி தடைப்பட்டதோ வென்று மயங்கினேன். மயக்கம் நீக்க வந்தமெய்யறிவாகக் கும்பவிதழ்கண்டேன்; களித்தேன். "ஊழையும்உப்பக்கங்காண உலைவின்றித் தாழாது உஞற்றுபவராகித்" தாங்கள் தமிழ்க் குமுகாயத்தை மேனிலைக்குக் கொண்டு வருவீர்கள் என்ற நம்பிக்கையைத் தென்மொழி அன்பர்களாகிய நாங்கள் கொண்டிருக்கிறோம். தனிப் பெரும் புலவரே! தாங்கள் விரைவிலேயே தனிப்பெரும் நாடகத் தொடரோவியத்தை தென்மொழியில் வரைந்தும் பின்னரதனை நாடகப் பாவிய நூலாக வெளியிட்டும் "மனோன்மணீயத்திற்குப் பின் கல்லூரிப் பாடநூலாக்க வேறு நாடகநூல் இல்லையே" என்ற தமிழ்ப் பகைவர் சிலரின் பகட்டினைப் பறக்கச் செய்ய வேண்டுகிறேன்.

து. சம்பத்குமார், மாசனக் கல்லூரி, ஈரோடை.

O தன்னலமற்ற தனித்தமிழ் ஊற்றே! உங்கள் தனித்தமிழ் உள்ளங் கண்டு என் தமிழ் நெஞ்சம் தங்கு தடையில்லா மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்துகிறது. எந்த அரசியல் வழியும் செல்லாத தங்கள் நெறி கண்டு நெஞ்சம் நெகிழ்ந்து, இனிமேலும் அவ்வாறே ஏகுவீர்கள் என்ற உண்மைப் பிடிப்பில் உள்ளம் நிறைகிறேன். தங்களைக்கவிழ்க்க நினைக்கும் அரசியல் நரிகளை விரட்டவும் அழிக்கவும் ஒழிக்கவும் தனித் தமிழ்ப் புலிகள் தயங்கமாட்டார்கள். ஏறு நடையுடன வீறுகொண்டு நில்லுங்கள்! தங்களைக்காக்கத் தனித்தமிழ்ப்படை தங்களோடு வந்து கொண்டே இருக்கும்! தங்களை எதிர்ப்போரின் தலைகள் உருண்டு கொண்டே யிருக்கும்! அதைக்கண்ட பகைவர்கள் மருண்டு கொண்டே யிருப்பார்கள்! தமிழரின் அறியாமை நாற்றம் போக்குவோம்! மாற்றம் காண்போம்! ஏற்றம் பெறுவோம்! வீழ்த்துவோம் பகைச்செருக்கை! வாழ்த்துவாள் தமிழன்னை!

—பொ. சுந்தரம், வாழக்குறிச்சி, குழிபிறை (அஞ்) திருச்சி (மா.வ.)

O 'தென்மொழி' தளராது நடைபோட இறைவனை வழுத்துகின்றேன். தென்மொழி ஆசிரியவுரைகளைப் படிக்கும்போது உள்ளம் பீறிட்டெழுகிறது. குருதி கொப்பளிக்கிறது. தமிழர் நிலையினை, தமிழ் நிலையினை எண்ணும்போது புண்வாயில் எரி நுழைத்தாற்போல் துன்பம் மிகுகின்றது. இந்நிலை மாற வழியில்லைபோலும் என்று எண்ணவும் தோன்றுவதாயினும் விடிவு ஏற்பட்டே தீரும் என்ற நம்பிக்கையும் ஏற்படுகின்றது. இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடந்தமுறைச் சீர்கேடுகளைத் தென்மொழி வாயிலாக அறியத் துடிக்கின்றோம். தென்மொழி ஆசிரியவுரை உணர்ச்சியூட்ட வல்லது. உணர்வூட்டும் நிலைக்குத் தெனமொழிக்குத் தென்மொழியே இணை. வேறெதும் இல்லை. சுணக்கம் ஏற்படுவதன் கரணியமும் தெரியாது துடிக்கின்றோம்.

'நூறாசிரியம்' நூறாயிரம் பொற்றேங்காய் கொடுத்தாலும் ஈடாகாச் சிறப்புடையன. அதனைப் படிக்கும்போது புறநானூற்றிலும், அகம், குறுந்தொகை இவற்றிலுமாகக் கழக இலக்கியப் பூஞ்சோலையில் புக்குப் பேரின்பம் அடையும் நிலையினைப் பெறுகின்றேன். ஒவ்வோரிதழிலும் ஓராசிரியத்தோடு நிற்கப்பெறக்கண்டு ஆவல் கிளர்ந்தெழுகிறது. ஒவ்வோரிதழிலும் குறைந்தது மூன்று பாக்களாவது

(தொடர்ச்சி 3ஆம் அட்டைப்பக்கம்)

தென்மொழி

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே.

சுவடி-6::ஓலை-2

மீனம் (பங்குனி) தி. பி. ௧௯௯௯ (1968-ஏப்ரல்)

பொறுப்பாசிரியர்:-பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

வடவரும் பார்ப்பனரும் நாமும்!



தமிழகம் தனிப் பண்பாடும், மக்கள் வரலாறும், உலகிற்கே உயர்ந்த நாகரிகம் கற்பிக்கும் ஒப்புயர்வற்ற ஒரு மொழி வரலாறும் கொண்ட ஒரு நாடு. இஃது இறுதிக் காலத்திலன்றிப் பிறிதோர் இனத்திற்கு எப்பொழுதும் அடிமைப் படாத நிமிர்ந்த அரசியல் வரலாறு கொண்டது. இந்திய வரலாற்றை எழுதிய ஆரியச் சார்பினரும் பிற மேனாட்டினரும் இதன் வரலாற்றைத் தனியே ஆய்ந்தும், நடுநிலையோடும் இதுவரை எழுதவில்லை. எழுதிய சிலரும் வரலாற்றுக்கு அடிப்படையான மொழி, இனம், பண்பாடு,

நாகரிகம் என்ற வரலாற்றுப் பாகுபாட்டின் அடிப்படையில் எழுத முற்படவே இல்லை; எனவே இந்தியப் பண்பாடே தமிழகத்தின் பண்பாடாகவும், சமற்கிருதமே தமிழகத்து வழங்கும் மொழிகளுக்கெல்லாம் மூல மொழியாகவும், தமிழினம் ஆரிய இனத்தால் கலப்புற்ற ஓர் இனமாகவும், இதன் நாகரிகம் ஆரிய நாகரிகமாகவுமே காட்டப்பட்டு வந்திருக்கின்றன இப்படிப்பட்ட ஒருபெரிய சூழ்ச்சியினைக்கண்டு கொள்ளவும், விழிப்படையவும் இதனின்று விடுபடவும் தமிழர் இன்று முற்பட்டு விட்டனர். இனி, இதைத் தடுத்து நிறுத்த உலகத்தின் எந்த ஒரு மாந்த இனத்திற்கும், ஆட்சி வல்லாண்மைக்கும் ஆற்றல் இல்லை. இவை வெறும் சொற்களல்ல. உணர்ந்த உண்மை; முடிந்த முடிவு.

இந்தியாவில் இக்கால் நிலவிவருவது குடியரசாட்சியே என்றாலும், இந்திய அரசியலை ஆட்டிப்படைக்கும் மாபெரும் ஆற்றல்கள் இரண்டு. ஒன்று வடவரின் அரசியல் வெறி. இரண்டு ஆரியப் பார்ப்பனரின் சமயவெறி. வடவரின் அரசியல் வெறியே குடியரசு நெறியாக உள்நாட்டினர்க்கும் வெளிநாட்டினர்க்கும் வலிந்து காட்டப்பெற்று வருகின்றது. ஆரியப் பார்ப்பனரின்- வேதப் பிராமணரின் இந்து சமய வெறியே, இந்தியரின் பண்பாட்டுச் சிறப்பாகவும், உயர்ந்த மக்கள் நெறியாகவும் வலியுறுத்திப் பேசப்பட்டும்; பரப்பப்பட்டும் வருகின்றது. இவர்கள் இருவர் தம்போக்குக்கும் முயற்சிகளுக்கும் ஏற்ற படைக்கருவிகளாக இருப்பன செய்தித்தாள்கள், வானொலி, சமய குலப்பாகுபாடுகள், பகுத்தறிவற்ற பழக்க வழக்கங்கள். அண்மையில் வெளிவந்த செய்திப்படி, இந்தியாவில் ஏறத்தாழ 5000 'சாதியமைப்புகள் உள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வேறுபாடுகள் அத்துணையும் இயற்கையாகவே ஏற்பட்டன என்று சொல்லமுடியாது. ஆரியப் பார்ப்பனர் வருகைக்குமுன் தமிழர்களைப் பொறுத்த அளவில் தொழில் பாகுபாடுகளே இருந்தன என்றும், அவற்றுள் உயர்வு தாழ்வு வேறுபாடுகள் கிடையாவென்றும் வரலாற்று நூல்கள் குறிக்கின்றன. பார்ப்பனரே இவற்றுள் 'வருணச்சிரம தர்மம்' என்ற இனவேறுபாட்டு முறையைப் புகுத்தினர் என்பதாகவும் அவை கூறுகின்றன. இவற்றை அவர்கள் புகுத்தியதன் நோக்கம் சிறுபான்மையரான தங்கள் இனத்தைப் பெரும் பான்மையரான தமிழரினம் அழித்து ஒழித்து

விடாமல் தங்களைக் காத்துக் கொள்வதற்காகவும, சாதி வேற்றுமைகளால் பாகுபாடு செய்யப்பெற்ற அச்சிறு சிறு கூட்டங்களிடையில் தம் செல்வாக்கை வலுப்படுத்தவுமே என்றும் மேனாட்டாசிரியர் சிலர் துணிந்து குறிப்பிட்டுள்ளனர். தங்களுக்குப்பயன்படாத ஆட்சியினை எவ்வகையாலும், எவரைக் கொண்டேனும் ஒழித்துவிட வேண்டும் என்பதாகவே, பார்ப்பனர் தம் வேதங்கள், உபநிடதுகள் முதலியன குறிப்பிடுகின்றன. இன்ன ஓரை (இராசி)யில் பிறப்பவன் சூத்திரனாகவே பிறப்பான், அவன் பிராமணர்களுக்குக் கேடுகளையே செய்வான் என்பதாகக்கூட அவர் தம் கணியநூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்களுக்குக் கல்விக் கண்களைத் திறப்பதே பெரிய கரிசு (பாவம்) என்றெல்லாம் அவர்தம் நெறிநூல்கள் சாற்றுகின்றன. இவற்றிற்கெல்லாம் சான்றுகள், அடிப்படைகள் ஆயிரக்கணக்காக உள்ளன. அவற்றை யெல்லாம் இங்கெடுத்துக் கூறுவதானால் இக்கட்டுரை ஒரு பெரிய நூலாகவே விரியும்; மேலும் அவைபோன்ற எடுத்துக்காட்டுகள் ஏற்கனவே தென்மொழியில் பலமுறை வெளியிடப் பெற்றுள்ளன.

மேலே கூறப்பட்ட நெறிமுறைகள் எல்லாம் ஒன்றுவிடாமல் பார்ப்பனரால் இன்றும் செவ்வையாகக் கடைப்பிடிக்கப் படுகின்றன. இவற்றைத் தம் மக்கள் என்றும் மறந்து போகாமல் கடைப்பிடித்து அவ்வொழுக்கங்களில் சிறிதும் வழுவாது நடைபெற வேண்டும் என்பதற்காகவே காஞ்சிமுதல் காசிவரையுள்ள நூற்றுக் கணக்கான சமய 'பீடங்களும்' மடங்களும், அவற்றின் வெறிபிடித்த தலைமைகளும், அவற்றிற்குரிய கோடிக் கணக்கான சொத்துகளைக் கொண்டும், பொன் வெள்ளி முதலிய மதிப்புள்ள நகைநட்டுகளைக் கொண்டும் ஆயிரக்கணக்கான வேலி விளைச்சல் நிலங்களைக் கொண்டும் வேலை செய்தும், காப்பாற்றியும் வருகின்றனர். இவையும் போதாவென்று இராசாசி முதலிய அரசியல் தலைவர்களும் தங்களால் முடிந்த ஆற்றல்களை முழுவதும் பயன்படுத்தி, அவர்தம் குலங்களும் கூறுபாடுகளும் மயிரிழையும் பிறழாது நடைபெற நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வகையாகப் பொருளாலும் அதிகாரத்தாலும் துணையாக நின்று வருகின்றனர். இவற்றின் பயனாக இவர்கள் எண்ணியது எண்ணியபடி இயங்கவும் இயக்கவும் போதுமான

வலிமை மிக்க செய்தித் தாள்கள் இயங்குகின்றன. நீங்கள் படிக்கின்ற இத் 'தென்மொழி' ஏட்டை அச்சிடுகின்ற பொறியின் விலை மதிப்பைப்போல் ஏறத்தாழ 2000 மடங்கு விலை மதிப்பும் ஆற்றல் வாய்ந்ததுமான பொறிகளாலேயே, பார்ப்பனர்களின் INDIAN EXPRESS, MAIL, தினமணி, மித்திரன் முதலிய நூற்றுக் கணக்கான செய்தித் தாள்களும், கல்கி, ஆனந்த விகடன் முதலிய ஆயிரக்கணக்கான கிழமை, மாத இதழ்களும் அச்சிடப்பெற்று வெளிவருகின்றன என்று நீங்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவற்றுடன் நெய்வேலி, உயிர்முறிக் குழும்பு (L. I. C.) வானொலி முதலிய ஆயிரக்கணக்கான அரசினர் தொழிலகங்களிலும், பிற தனியார் தொழிலகங்களிலும் நூற்றுக்கு 70, 80 விழுக்காடு பார்ப்பனர்களே நீக்கமற நிறைந்துள்ளனர் இவையுமன்றி எங்கெங்குத் தமிழர் திறமையுடன் செயல்படுகின்றனரோ, அவ்விடங்களிலெல்லாம் பார்ப்பனப் பெண்டிர்களும், மேலாளர்களும் திறமையுடன் ஊடுருவல் செய்து அவர்தம் வல்லாண்மைத் திறத்திற்கும் செயற்பாட்டிற்கும் நிலையான தடையிட்டு வருகின்றனர். பெரும் புகழ்பெற்ற புதின ஆசிரியர் ஒருவர் தம்பால், அழகும் இளமையும், கல்வித்திறமும் வாய்ந்த பார்ப்பனக் கன்னிப் பெண் ஒருத்தியை, அவருக்குத் துணையாக, மாதஇதழ் நடத்தும் பார்ப்பனக் கூட்டம் ஒன்று அனுப்பிவைத்ததும், அப்பெண் அவருக்கே இரண்டாம் மனைவியாக அமர்ந்து கொண்டு அவர் எழுதிவரும் நூல்களிலெல்லாம் கருத்துகளிலெல்லாம் தன் இனத்தின் திருவேலைகளைச் செய்து கொண்டிருப்பதையும், அவ்வடிப்படையில் இயங்கும் தமிழ் எழுத்தாளர் பலர் அறியார்.

இவ்வாறு எங்கும் எத்துறையிலும் அவர்கள் நீக்கமற 'ஊடுருவி, ஊக்கமுற உழைத்து அவர்தம் இன முன்னேற்றத்தை ஆக்கமுறச் செய்வதைப் பெரும்பான்மைத் தமிழர் இன்னும் உணர்ந்திரார். அவ்வாறு அவர்கள் ஊடுருவி நிற்பதற்கு அவர்களுக்கிருக்கும் சூழ்ச்சி வாய்ந்த மூளைத்திறனும், கலையுணர்வும், கரவும் பொதிந்த நடிப்பும், அன்பொழுகுமாறு பேசும் பேச்சும், தேவையான பொழுது நாணத்தையும் பண்பாட்டையும்கூட, கைவிட்டுவிட்டு மேற்செல்லும் வினைத்திறனுமே காரணங்களாகும். இவற்றில் ஒன்றேனும் நம் தமிழரால் இன்னும் செப்பமாகக்

கடைப்பிடிக்கப் படுவதில்லை. சூழ்ச்சி நமக்கு எதிராகச் செயல் படும் பொழுதில் நாம் நடுநிலையைக் கையாளவேண்டிய தேவை யில்லை. இனி, இவற்றையெல்லாம் இங்கு எதற்காகக் குறிப்பிடு கிறேமென்றால், நம்மைக் கீழறுக்கும்வேலை, எத்துணை ஆற்ற லொடும் முடுக்கத்தொடும் இந்திய ஒற்றுமை, தேசியம் என்ற பொன்முலாம் பூசப்பட்ட பெயர்களால் செயல்படுத்தப் பெறுகின் றது என்பதை உணர்த்திக்காட்ட வேண்டியே ஆகும்.

இவ்வாறு, இந்திய ஆட்சி என்பது வெளிப்படையாகக் குடி யரசு எனப்பட்டாலும், உள்முகமாகப் பார்ப்பனராலும், வடவரா லும் பிறஇனங்களை ஆரியத்தால் ஆளப்படுகின்ற ஓர் ஆட்சி யாகவே கருதவேண்டியுள்ளது. எனவே இப்படிப்பட்ட ஓர் ஆட்சி யில் தமிழர்கள் தங்கள் மொழி, இன, பண்பாடு முதலிய அடிப் படைக் குமுகாய உரிமைகளை அழித்துக்கொண்டே வாழவேண்டி யுள்ளது. இவ்வடிப்படை உரிமைகளை முற்றும் இழந்துகொண்டு தமிழரினம் வாழ்ந்துகொண்டிருப்பதைவிடத் தன்னுரிமை பெற் றுச் செத்துப்போவது எவ்வளவோ மேலென்று கருதவேண்டி உள்ளது.

தமிழர்களில் ஒருசாராரும், இந்தியர்களில் பெரும்பான்மையோரும் பேராயக்கட்சி போன்ற பெரிய தேசியக் கட்சிகளில் இருந்து இந்தியா வைக் குமுகாய அளவிலும், அரசியலளவிலும் சீர்திருத்திவிடமுடியும் என்பது வெறும் கனவுக் கற்பனைகளாகவே முடியும் என்பது திண் ணம். அவர்கள் எத்துணையளவு சிறந்த கோட்பாடுகளையும் திட்டங் களையும் கொண்டதாகத் தங்கள் கட்சியை அமைத்துக்கொண்டாலும், அத்துணைச் சிறப்பும் வடவரின் அதிகார வெறியாலும் பார்ப்பனரின் சாதிசமய பூசல்களாலுமே சிதைத்தொழிக்கப்படும் என்பதை உண்மை அறிவுடையோர் எவரும் எளிதே கண்டு கொள்வர். குறிப்பாகப் பார்ப் பனர்க்கிருக்குப் படைக் கருவிகளான செய்தித்தாள்கள், வானொலி வாய்ப்புகள், பகுத்தறிவுக்கும் அறிவியலுக்கும் சற்றும் பொருந்தி வராத இந்து சமயப் பூசல்கள், வேத புராணப் பழக்க வழக்கங்கள் முதலியவற்றைக் கொண்டு, அவர்கள் எத்தகைய பெரிய அரசையும் கவிழ்த்து விடமுடியும், எத்தகைய பெரிய குமுகாய அமைப்பையும் மாற்றி அமைத்துவிட முடியும். எவ்வளவு மிகுதியாகக் கற்றவரையும் உருச்சிதைத்துவிட முடியும்; தாங்கள் எவ்வளவு புறக்கணிக்கப் பெற் றுத் தங்களை எத்துணைக் கீழ்ப்படியில் கொண்டுபோய் நிறுத்தினும்

மேலே கொண்டுவந்து உய்வித்துக்கொள்ள முடியும். பொதுவாக தம் போக்கிற்கு மாறுகஉள்ள எவ்வளவு வலிமை !மிகுந்த எதிரிகளையும் முறியடித்துவிட முடியும். இவற்றை உடனடியாகச் செய்யமுடியாமற் போனாலும் படிப்படியாகவேனும் அவர்களால் செய்து கொள்ளமுடியும் இனி, இத்தகைய வேலைகளை அவர்கள் நேரடியாகச் செய்ய முடியாமற் போனாலும் எதிராளர்களில் உள்ள பேராவற்காரர்களையும், பேதைகளை யும், பட்டம்பதவி நசையாளர்களையும், அநுமவீடணப் பிரகலாதன் போன்றவர்களையும், வையாபுரி, முத்துச்சண்முகம், முத்தையன், பக்த வத்சலம், சுப்பிரமணியம் போன்றவர்களையும் கொண்டாவது தங்கள் உளக்கருத்துகளைச் செயற்படுத்திக்கொள்ள முடியும்.

மேலே குறிப்பிடப்பெற்ற வகைகளிலன்றி, இன்னொரு வகையி யிலும் தமிழினம் தாழ்த்தப்பட்டும், சிதைக்கப்பட்டும், அழிக்கப்பட் டும் வருகின்றது. அதுதான் பண்பாட்டையும், இனவுணர்வையும், தன்மானத்தையும் தம் உடற்பசிக்கும், வயிற்றுப் பசிக்கும், மனப் பசிக்கும் விலை போக்கிக் கொண்டுள்ள ஆதித்தன் போன்றவர்கள் நடத்தும் கழிசடை இனக்கவர்ச்சி இழிநிலை யிதழ்களால் காசு திரட் டும் கயமைச் செயல்கள. அவர்கள் நடத்தும் தாள்களால் தமிழ்ப்பண் பாடே கெட்டுச் சீரழிந்து குட்டிச்சுவராகி விட்டது. இவர்களால் ஏற் பட்ட குமுகாய ஒழுக்கச் சீர்கேடுகளை, நூறு குன்றக்குடிகளும், கிருபா னந்தவாரிகளும், மூலிகைமணி ஆசிரியர்களும் வந்தாலும், சொல் லாலோ, சமயவுணர்வாலோ மருந்து மனவியல்களாலோ அகற்றிவிட முடியாது என்பதை எல்லாத் தமிழர்களும் தெள்ளிதின் உணர்ந்து கொள்க. ஏனெனில் அவ்வகைத் தாள்களில் எழுதும் எழுத்தாளர்களும் கயவர்களும் தங்கள் தூவல்களைச் சாய்க்கடையிலும், மலக்கரைசல்களி லும் தொட்டு மேனாட்டு கண்ணாடித் துணிகளின் மேலேயே எழுதி வருகின்றனர்.

இவற்றையெல்லாம் 2000 கற்களுக்கு அப்பால் உள்ள இந்திய அரசியலில் அக்கறையும இந்தியர் முன்னேற்றத்தில் நாட்டமும் கொண்ட ஓரிரு நடுநிலையான அமைச்சர்கள் கண்டு கொள்வார்கள் என்றோ. அக்கறை கொண்டு போக்கி விடுவார்கள் என்றோ இங்குள்ள தமிழர்கள் நம்பிக்கை கொள்ளமுடியாது. இவற்றை அரசியல் சட்டத் தாலேயே ஒன்றும் செய்துவிட முடியாது. மலத்தைக் கத்தி கொண்டு அகற்றிவிட முடியாது. பார்ப்பனர்களால் வெட்டப்படும படுகுழி

களையே தூர்த்து முன்னேறிப் போகமுடியாத தமிழர்கள், இப்படிப் பட்ட தமிழ்க் குமுகாயக் கேடர்களால் போடப்படும் தடைக் கற்களை அகற்ற முடியாமல் திண்டாடிக் கொண்டுள்ளதை உண்மைத் தமிழன்பர் உணரவேண்டும்.

இவ்வாறு தமிழர் இன்மே வடவராலும், பார்ப்பனராலும் தமிழ்க் கழிசடைக் கயவர்களாலும் சீரழிக்கப்பட்டு வரும் ஒரு நிலையை யாரிடம்போய்ச் சொல்லி அழுவது? அரசியல் சார்பில் வடவனிடமேபோய் உரிமை கேட்டு அழவேண்டியுள்ளது; குமுகாய அளவில் பார்ப்பனனிடமே போய்ச் சாதியை ஒழி, சமயத்தைச் சமப்படுத்து என்று அவன் உச்சிக்குடுமியையும் பூணூலையும பிடித்துத் தொங்கித் தொலைக்க வேண்டியுள்ளது. ஏதாவது எழுதவோ எழுதுகின்ற கருதது விளமபரம்பெறவோ வேண்டியிருப்பின் தினத்தந்திக் கூட்டங்களிடமேபோய்க் கால்பிடிக்கவேண்டியுள்ளது. இந்நிலையில் எந்த அரசியல், பொருளியல் குமுகாயவியல் அறிஞனும் எந்தக் கருத்தையும், உண்மையையும் எடுத்துச் சொல்லி எதனையும் செய்துவிட முடியாதபடி தமிழ்க் குமுகாயமே இருண்டு கொண்டுள்ளது.

ஆகவே இருண்டுள்ள இத்தமிழர் தம் உள்ளங்களில் தன்மான உணர்வை எழுப்ப எங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டு விட்டோம். அதற்கு ஒரே முடிவு இது தான் தமிழர்கள் எல்லாத் துறைகளிலும் நசுக்கப்பட்டும், ஒடுக்கப் பட்டும், சிதைக்கப்பட்டும், ஒழிக்கப்பட்டும் வருகின்றனர். இதைத் தடுத்து நிறுத்தியே ஆகல்வேண்டும். அதற்கு இந்திய அரசின் இணங்கிய தேசியவுணர்வு தோதாய் அமையவில்லை. ஒருவேளை இப் படிப்பட்ட இந்திய ஒருமைப்பாட்டை உருசியனோ, அமெரிக்கனோ, சீனனோ வந்து அமைத்தால்தான் சரிவர அமையுமோ தெரியவில்லை. பூனைகள் என்றைக்கும் எலிகளுக்குத் தலைவர்களாக முடியாது. பாம்புகள் என்றைக்கும் தவளைகளுக்கு வழிகாட்டிவிட முடியாது. கோடரிக் காம்புகள் என்றும் அரியப்படும கோடுகளையும், கொம்புகளையும் காப் பாற்றிவிடமுடியாது. வடவர்கள் இந்தியைத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டே தமிழை வாழவைக்க முடியாது. பார்ப்பனர்கள் தங்கள் மேனிகளில் சுற்றிக்கொண்டுள்ள பூணூலைக் கழற்றி நீர்ச்சீலை கட்டும் இடுப்புநூலாகப் பயன்படுத்தும்வரை, தங்கள் குடுமிகளைக் கத்தரித் துக் குப்பையில் போடும்வரை, அவற்றிற்கொரு புனிதமும் 'புராண

மும்' கூறி மக்களை மடையர்களாக ஆக்குவதை நிறுத்தும்வரை, ஆதித்தன் போன்ற தமிழ்ப் பண்பாட்டுக் கேடர்களின் தினத்தந்தி, இராணி போன்ற தாள்கள் ஒழிக்கப்படும்வரை இந்தியாவில் தேசியமும் வராது; தமிழர்களும் முன்னேறி விடமுடியாது. கடல்வற்றுவது எப்பொழுது கருவாடு தின்பது எப்பொழுது?

எனவே தமிழர்களுக்குள்ள ஒரேவழி தமிழகத்தைத் தனியாகப் பிரித்துக்கொண்டு தாமே ஆண்டுகொள்வதுதான். தமிழன் என்றைக்கும் அடிமையாகவே இருக்க விரும்பவில்லை. அவன் தன்னைத் தானாகவே ஆண்டுகொள்ள எண்ணங் கொண்டு விட்டான். தமிழகத்தின் இளைஞர்களும், மாணவர்களும் எழுந்துவிட்டனர். தமிழக மறுமலர்ச்சி ஏற்பட்டே தீரும் என்று சூளுரைத்து விட்டனர். பெரியார் ஈ. வே. இரா. அவர்களும் தமிழக விடுதலைக்குச் சங்கு முழக்கம் காட்டி விட்டார். அவர் கூட்டும் படைக்கு ஆயிரம் ஆயிரம் தமிழுணர்வுள்ள இளைஞர்களும், மாணவர்களும் தேவை. அவர்களுள் 'தென்மொழிப் படை' முனைமுகத்து நிற்கத் துடிக்கின்றது; முதற்பலியாகவும் தன்னை அணியப் படுத்திக் கொண்டது. இந்த உறுதியைத் தமிழக விடுதலை நோக்கிப்படைநடத்தும் பெரியாருக்கு முதல்படையலாகத் தருகின்றது "தமிழர் படை வெல்க! தமிழ்த்தாய் அரியணை யேறுக" எனக் குரலுயர்த்தித் தமிழரை அழைக்கின்றது தென்மொழி! எல்லாரும் வம்மின்!

—பெருஞ்சித்திரன்.

தென்மொழி கூட்டப்படவிருக்கும் தமிழக விடுதலைப் படையில்

நீங்கள் ஒரு மறவரா?

- உங்கள் உறுதிப்பாட்டை முழுமுகவரியுடன் உடனே எமக்கு எழுதி, உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்!
- போதிய உறுப்பினர்கள் சேர்ந்தவுடன் மே மாத இறுதியில் செயற்குழு கூட்டப்பெறும்.
- பிறவிளக்கங்கள் பின்.

பெருஞ்சித்திரன்,
ஆசிரியர், தென்மொழி.

பெரியாரின் விடுதலை முழக்கம்!

நீக்ரோக்களைப்போல் உணர்வுபெறுக!

0 தனித்தமிழ்நாடு பெறுவதற்குத் தக்கவிலை கொடுத்தாக வேண்டும்.

0 நம்மில் பலர் சிறைக்குப் போகவும் உயிர்ப்பலிக்கும் அஞ்சாமல் விடுதலைப்போரில் ஈடுபட முன்வாருங்கள்.

0 தில்லியின்கீழ்ப் போர்குற்றவாளிகளைப்போல் இனியும் வாழ்வதா?

0 பற்றற்ற துறவிகள்போல் குடும்பத்தை விட்டு வெளியேறிப் போருக்கு அணியமாகுங்கள்!

வெள்ளையர்களால்தான் தமிழர்கள் சிறிதளவாவது மானவுணர்வுபெற முடிந்தது. வெள்ளையன் போனபிறகு விடுதலை என்ற பேரால் தற்பொழுது நமது இழிநிலையும் பார்ப்பனத் தனியதிகாரச் சட்டத்தின்கீழ் அடிமைப்பட்டிருக்கும் நிலையும் நம்மை என்றென்றைக்கும் தலைதூக்க முடியாமல் செய்திருக்கிறது. தமிழர்கள் மானத்துடன் வாழவேண்டுமானால் இந்தப் பார்ப்பனப் பிடியிலிருந்தும்–தில்லியின் வல்லாண்மையிலிருந்தும் விடுபட்டுத் தமிழகத்தைத் தனி விடுதலை நாடாக ஆக்கிக்கொள்ள வேண்டும். இதைச்செய்தே தீரவேண்டும். இல்லாவிடில் நமது மான நிலையைக் காக்கத்தக்க வெளியார் யாரையாவது அழைத்தாவது நாம் விடுதலை பெற்றாக வேண்டும்.

நாம் தனிநாடாகப் பிரிந்து கொள்ளாத வரையில் இந்த அடிமை நிலையிலேயே போர்க்குற்றவாளிகளைப்போல் தில்லிக்காரன் நடத்தும் நிலையிலிருந்து மீளமுடியாது. ஆகவே நாம் இந்தியக் கூட்டாட்சியிலிருந்து விடுதலையடையப் போராடியே ஆகவேண்டும். அதற்காக ஈகம் (தியாகம்) பல செய்தாக வேண்டும், பல உயிர்ப் பலி கொடுத்தாக வேண்டும். என்றிருந்தாலும் சாகுபவர்தாமே நாம். நம்மக்கள் விடுதலைக்காக உயிரிழப்பதனால் கேடில்லை. நமக்கு மானவுணர்வு வேண்டாவா? இன்னமும் பார்ப்பானுக்குக் கூத்திமக்களாக நாம் இருப்பதா? நமக்கு உரிய பங்கை நாம் பறித்துக் கொள்ளவிட்டு நம் மக்கள் வேலையின்றிப் பட்டினி கிடப்பதா? அமெரிக்காவின் நீக்ரோ மக்களைப் பாருங்கள்! மக்கள் தொகையில் எட்டில் ஒரு பகுதியே உள்ளவர்கள் தங்கள் உரிமை பறிபோவதைப் பொறுக்கவில்லை! கிளர்ந்து எழுந்து போராடுகின்றனர். அதுபோல் தமிழர் உரிமையையும் அறத்தையும் நிலைநாட்ட வேண்டி இந்தியக் கூட்டாட்சியிலிருந்து பிரிந்து தமிழ்நாட்டை விடுதலை நாடாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

(ஏப். 15-இல் பெரியாரின் சென்னைப் பேச்சு –'விடுதலை')

சிறுத்தையே வெளியில் வா!

பாவேந்தர்-பாரதிதாசன்.

பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப் பட்டது! சிறுத்தையே வெளியில்வா!
எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலிஎனச் செயல்செய்யப் புறப்படு வெளியில்!
நம்பிணை பகலினை நள்ளிருள் என்றே!
சிம்புட் பறவையே சிறகை விரி, எழு!
சிங்க இளைஞனே திருப்புமுகம்! திறவிழி!
இங்குன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா?
கைவிரித்து வந்த கயவர் நம்மிடைப்
பொய்வி ரித்துநம் புலன்கள் மறைத்துத்
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி
நமக்குள உரிமை தமக்கென் பார்எனில்,
வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற் றெங்கே? விழிப்புற்றெழுக!
இகழ்ச்சி நேர்ந்தால் இறப்போம் என்றும்
புகழ்ச்சி யேஎம் பூணும் என்றும்
வையம் ஆண்ட வண்டமிழ் மரபே
கையிருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும் உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணுக் கடல்போல் மாப்பகை மேல்விடு!
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு!
பொன்மொழிக்கு நீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை யுயர்த்துக!
கைக்குள் திறமை காட்ட எழுந்திரு!
வாழ்க இளைஞனே, வாழ்க நின்கூடம்!
வாழ்க செந்தமிழ் நாடு!
வாழ்கநின் வையத்து மாப்புகழ் நன்றே.

இலக்கியம்

நூறாசிரியம்

துரை-மாணிக்கம்

பாட்டு: கக

அன்பெனப் புகழ்கோ! அருளென மகிழ்கோ!
என்கொல் பாகர்க் கிடுகறி யென்று
அறிந்திசின் போதந்த ஏவலற் கெம்மனைப்
பாகற் பசுங்காய்ப் புளிக்குழை யட்டுத்
தாய்தர மிசைந்த தகவுரைத் தெங்கோ
அதுநயந் தருந்தா ராகலின் அதுமற்றுப்
பிறகொளக் கூறுகோ வென்றலு மவன்மீண்டுப்
பெய்துகத் தந்த திவக்காண்; முழுத்தும்
பைம்பருக் கொழும்புடை பாகல்;
ஐதகைக் கென்யான் நோற்ற வாறே!

பாட்டு: கக

பொழிப்பு;-

(இந் நிகழ்ச்சியை) அன்பென்று புறத்தே புகழ்வேனோ? அருளென அகத்தே மகிழ்வேனோ? 'என்ன வேண்டுங்கொல்? சமைக்கப் பெறும் நாட் குழம்பிற்கு இடுகின்ற கறி' என என்பால் அறிந்து போக வந்த ஏவலனிடம், எம்மனையின்கண் பசிய பாகற்காயினைப் புளிக்குற்றிக் குழையாகச் சமைத்து, என் தாய் தர யான் விரும்பி யுண்ட தன்மையைக் கூறி, என் தலைவன் அக்குழம்பினை விரும்பி

அருந்தாராகலின், அப் பாகற்காய் தவிர (அவர் விரும்பும்) பிற யாதாயினும் வாங்கித் தரக் கூறுவாயாக என்று யான் கூறினேனாக அவன் அது கேட்டுப்போய், மீண்டும் வந்து யான் மகிழுமாறு கொட்டித் தந்தவற்றை இதோ, ஈங்குக் காண்பாயாக; முழுவதும் பசிய பருக்களையுடைய கொழுவிப் புடைத்த பாகற்காய்களை; (என் நலமே கருதும் என்) தலைவரின் பெருந்தகைமைக்கு யான் நோற்ற வகை என்னே!

விரிப்பு:

இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது. என்னை? அகத்துப்படும் தலைவனின் அன்பைப் புறத்துப் புலப்படக் கூறினளாயின் புறம் என்க.

தலைவன் மாட்டுக்கண்ட சிறந்ததோர் அன்பு நிகழ்ச்சியைத் தோழிக்குக்கூறி, அவன் தன்பால் கொண்டபரிவை அன்பென்று புகழ்தல் தகுமோ, அருளென்று மகிழ்தல் தகுமோ? என்று வியந்தும், அத்தகையானை இல்லறத் தலைவனாக அடையப் பெறற்கு யான நோற்ற தவத்தின் அளவுதான் என்னை? எனப் பெருமிதம் படவும் தலைவி கூறுவதாக அமைந்ததிப் பாடல்.

அன்பு:- தன் நலம் கெடாமல் பிறர் நலம் பேணக்காட்டும் மன நெகிழ்ச்சி! கொள்வார் கொளப்பெற்றார் இருவர்க்கும் நலமே பெருக்கும் மனவுணர்வு. இருவர் மனத்தட்டுகளையும், சமனுற நிறுத்தும் உணர்வுத்துலை (தராசு). கொண்டார் இருவருள் ஒருவரைக் களிப்பவும், பிறிதொருவரைக் கனப்பவும் செய்யாமல், ஒரே பொழுதில், இருவரையும் இன்பினும் துன்பினும் அழுத்தும் வல்லுணர்வு. (அன்பு = அல் + பு = இரண்டல்தன்மை. பு–பண்புப் பெயரீறு.) அன்பு உலகத்து எல்லா உயிர்களிடத்துங் காணப்பெறுவதாகியதொரு நல்லுணர்வெனினும், இது புழு, பூச்சிபோலும் அடிநிலை உயிர்களிடத்து மெய்யான் மிகுந்தும், உளத்தான் குறைந்தும் நின்று, ஒன்றையொன்று ஈர்த்துப் பிணைத்து ஒருணர்வாக்கும் தன்மைத்து என்க. உளத்தான் குன்றி மெய்யான் மிகுதலான், அவ்வுயிர்களிடம் மெய்யுறு புணர்வுக்கே இது பயன்படுவது என்க எனவே அதற்கொப்பப் பால்வழித் தழுவி நிற்குமெனக. என்னை? பருப்பொருள்களுள், நேரும் எதிருமாய மின்னாற்றல் கொண்டவை ஒன்றையொன்று கவர்ந்திழுத்து உடன்படுதல் போல், அடிநிலை உயிர்களுள் ஆணும் பெண்

ணுமாய மின்னேட்டம் கொண்டவை ஒன்றையொன்று கவர இது பயன்படும் என்க. இனி; அவற்றினும் உயர்ந்த பறவை, விலங்கு போலும் நடுநிலை உயிர்களுக்கு மெய்யானும் உளத்தானும் ஒப்பத் தோன்றலின், அவற்றிடம் ஒருகால் மனவுணர்வால் பிறிது நலம் பேணற்கும், மறுகால் உடலுணர்வால் ஊறின்பம் நிகழ்த்தற்கும் பயன்படும் என்றறிக. இனி, முடிநிலை உயிர்களாகிய மாந்தரிடத்து இஃது உளத்தான் மிகுந்தும் மெய்யான் குறைந்தும் நிற்றலால், வாழ்க்கை பேரளவான் பரிமாறும் மனவுணர்வின் வெளிப்பட்டு நினைவின்பமும், சிற்றளவான் பரிமாறும் உடலுணர்வின் வெளிப்பட்டுப் புணர்வின்பமும் தோற்றுவிக்கும் தன்மைத்தாயது. உடலுணர்வு தேய்வுறுங்கால் இதுமுழுவதும் மனவுணர்வானே ஆட்பட்டு நிற்கும். உடல் பிரிவுறினும் மனப்பிரிவு அன்பாட்சியில் இல்லை என்க.

அருள்:- அன்பின் முதிர்நிலை; தன்நலங் கேடுறினும் பிறர் நலம் பேணக்காட்டும் மன நெகிழ்ச்சி. உளத்தின் அரிதாய தன்மை (அரு+உள்-அருள்: அரு-அருமை, அரியதன்மை.) அன்பு எதிர் வினை கோளும்; அருள் எதிர்வினை கோளாது. எதிர்வினை என்பது காட்டுதற்குக் காட்டப்படுவதும், நீட்டுதற்கு நீட்டப்படுவதுமாய எதிர்விளைவு. இது பயன் அடிப்படையது. இது கடைக்கீழ்நிலை உயிர்கள் பாலும் தலைமேல்நிலை உயிர்களால் செலுத்தப் பெறுவது. அருள் மேனிலை உயிர்களின் மீமிசை மாந்தக்குணம் துன்ப விளைவையும் இன்ப நேர்ச்சியையும் ஒன்றெனவே கருதும் தூய உளத்தில் தோன்றி வெளிப்படுவது அருள். பெரும்பாலும் புறத்தே புலப்படத் தோன்றாது அகத்தின் நல்லுணர்வான் கண்டறிவது. அருளாட்சி மிக்காருக்கு இவ்வுலகம் வேறுபாடுறத் தோன்றாது. உளத்தின் அருவாகிய தன்மை அருள். அருவாந்தன்மை எவ்வகை உருவானும் பற்றப்படாதநிலை. வெறுப்பு விருப்பு, தாழ்வு, உயர்வு, இழிவு, சிறப்பு, முன், பின் முதலிய பூதநிலை மாற்றங்களான் உருவாகத் தோற்றி நிற்கும் உருத் தோற்றம் இலவாகும் உளநிலை அருள்; மெய்யறிவு பற்றி நிற்கும் அன்பு. அன்பு உருவான் பற்றப்படுவது. அருள், அருவான் பற்றப்படுவது. அரு+உள்—அருள் என்க.

அன்பெனப் புகழ்கோ, அருளென மகிழ்கோ: புறத்தே புலப்படத்தோன்றும் அன்பென்று புகழ்வேனோ? அகத்தே புலப்படுத்தும் அருளென மனத்தான் நிறைவுறுவேனோ? இல்லறப் பொதுவாயது அன்பு எனினும், அதுதான் மனத்தான் நுகரும் அளவானே நிறைந்

திநந்து, இதுகால் புறத்தே புகழக்தரியதாக நிறைந்து வழிதலாப தன்மையான் புகழுக்குரியதாகலின், புகழ்வேறு என்றும், அன்றித் தன்னுயிரை இரங்குதற் கேதுவாகிய உயிரென்று கருதித் தன்னிலேபி னும் மிக்துயர்ந்து தன் அக மகிழ்ச்சிக்கே முற்றும் உரியதாகலின் அருளெனக் கருதி மகிழ்வேனே என்றாள் என்க. அன்பு நிகழ்ச்சி பிற ராலும் எண்ணிப் புகழ்தற்குரியது என்றும், அருள் தன்னளவானே எண்ணி மகிழ்தற்குரியது என்றும் குறிப்புணர்த்தினாள் என்றபடி.

என்கொல் பாகர்க்கு இடுகறி என்ன: நாட்குழம்பிற்கு இடப் படும் கறி என்கொல் வேண்டுவது என்று. பாகர்-குழம்பு.

அறிந்திசின் போதந்த ஏவலர்க்கு: கேட்டு அறிந்து போமாறு வந்த ஏவலனுக்கு.

எம்மனை.........தகவுரைத்து: எம்மனையின் கண்ணே பாகற் காயினைப் புளிக்குழைத்துச் சமைத்துத் தாய்தர யான் மிசைந்த தன் மையை உரைத்து; எனக்கது மிகவிருப்பம்என்று ஏவலனுக்குப் புலப் படுத்தினாள் என்க. இசின்-அசை. எங்கோ-எம் தலைவன்.

அது நயந்து அருந்தார் ஆகலின்: அதனை விரும்பி உண்ணார் ஆகலின். தனக்காகும் பாகற்காயின் புளிக்குழம்பு, தன் கணவர் விருப்பியுண்ணுதற்காகாது என்று கூறினாள் என்றபடி.

அது மற்று: அது தவிர,

பிறகொளக் கூறுகோ: பிற யாதாயினும் அவர் விரும்பி உண் ணுதற்கானவற்றை வாங்கியனுப்பக் கூறுவாய்.

என்றலும்: என்று யான் கூறலும்.

அவன் மீண்டு: அவன் கேட்டறிந்து தலைவனிடம் போய் இது கூறி, வாங்கியவாறு மீண்டும் வந்து.

பெய்து உகத்தந்தது இவக்காண்: பெய்து, மகிழும்படி தந்த வற்றை இதோகாண் என்று தோழியிடம் காட்டினாள் என்றபடி.

தனக்குப் பாகர்ப்பசுங்காயின் புளிக்குழம்பு விருப்பம் என்று ஏவலனிடம் கூறினாளேனும், அது தன் தலைவர் விரும்பி யுண்ணார் ஆகலின், அது தவிரப் பிற அவர் விரும்பும் கறியினை வாங்கியனுப்பக்

கூற, அவன் இவள் விருப்பங்கண்டு, அது தனக்கு விருப்பம் அன்றெனினும், அதனையே வாங்கிவிடுத்த பேரன்பினைக்காண் என்று தோழியிடம் கூறினாள் என்க. இஃது அவன் தன்மேல் இயற்கையாகக் காட்டும் அன்பினும் மிகவுயர்ந்த உளச்செயல் ஆகுமென்றும், எனவே அஃது அருளின்பாற்படும் என்றும் கருதிக் கூறினாள் எனக்கொள்க.

தான் விரும்பியுண்ணும் பாகற்காயின் புளிக்குழம்பு அவனாலும் விரும்பப்படுவதொன்றாக விருந்து, அதனை அவன் தன் பொருட்டு வாங்கி விடுப்பானாயின் அதனை அன்பென்று கருதிக் கொள்வதே இயல்பென்றும், அஃதன்றித் தன்விருப்பம் அவன் விருப்பம் அன்று எனினும், தன் விருப்பத்தினையே செயல்படுத்தித் தன் விழைவு கருதிற்றிலன் என்பதால், அது தன்மேல் இரங்கிச்செய்த செயலாகலின் அஃது அருளேயென்றும் தெளிந்தனள் எனவும் கொள்க.

முழுத்தும்:- முழுவதும்.

பைம்பருக் கொழும்புடை பாகல்:- பசிய பருக்களையுடைய கொழுவிப் புடைத்த பாகற்காய். பாகற்காய் தனக்கு மிகுவிருப்பமான தொன்றாகலின் அதனை வண்ணித்துக் கூறினாள் என்றபடி.

பாகல் என்னாது பருத்த பாகல் என்றும், வெறும் பருத்தது என்னாது கொழுமையாகப் பருத்தது என்றும் கூறினாள் என்க. பசிய பருக்கள் மிகுந்த பாகல் என்பதால் அதன் பிஞ்சுமை கூறினாள் என்க. பாகல் முதிர்வுறின், அது செம்மஞ்சள் நிறம் படருமாகலின், அஃதன்றிப் பசிய இளங்காய் என்று விதந்து கூறினள் என்றபடி.

ஐ:- தலைவன்.

தகை:- தகவுடைத்தாம் தன்மை. அருள் நிரம்பிப் பெருமை சான்ற தன்மையான் தகை என்றாள்.

ஐ தகை:- தலைவனாகிய தகைவோன்.

என்யான் நோற்றவாறு:- யான் இதைப் பெற எத்துணை பெரு நோன்பு செய்திருத்தல் வேண்டும் என்றபடி.

நோற்றல்:- நோன்பு கடைப்பிடித்தல்.

நோன்பு:- தவமிருத்தல். நோல்-பகுதி.

நோலுதல்;- துயர் பொறுத்தல். தவமிருத்தல், புலன்வேட்கை தள்ளி, தன் மனத்தில் தான் வேண்டுவது பெறக்கருதி அது மேல் தான் நீரும் உணவும் அகற்றி மனமுறைத்து நிலைபடக் கிடப்பது.

நல்ல கணவனைப் பெறல் வேண்டி முற்பருவத்தே பாவையர் இளமை நலம் தவிர்த்து மனத்துக்கண் மாசிலராகி எண்ணிய எண்ணி யாங்கு எய்த ஆற்றியிருத்தல்.

தான்விரும்பி ஒன்றுகூற, அது தன் விருப்பம் அன்றேனும் தன் விருப்பத்தினையே மேலெனக்கொண்டு, அதனையே செயற்படுத்தத் தன் தலைவன் விரும்பிய அச்செயலை தலைவி அது தன்பால் கொண்ட அருள்நோக்கு என்று கண்டு, அத்தகைய அருஞ்செயலை அவன் தன் பொருட்டு இரங்கிச் செய்யுமாறும், அத்தகு செயல் புரிதற்கு ஆகிய பெருந்தகைமை பெற்ற அத்தலைவனைத் தான் கணவனாகப் பெற்றதற் கும் எத்துணையளவு நோன்பு பெற்றிருத்தல் வேண்டும் என்று கூறி வியந்தனள் என்க. என்னை? தான் செய்த தவத்தின் அளவு, அது பயன் கொடுக்கும் பொழுதிலன்றி அறியப் பெறுதாகையால், அதன் அளவும் பெருமையும் ஈண்டு அவனால் அறியப் பெற்று ளாகலின், தான் எத்துணையளவு நோன்பு நோற்றிருத்தல் வேண்டும் என்பதும் அதன் பயனாகத் தான் எத்துணையளவு தகைமை பெற்ற தலைவனை அடையப்பெற்றாள் என வியந்து கூறினாள் என்பதுமாம்.

இது புறப்பொதுவியல் என்திணையும், கற்பு முல்லை என் துறையுமாகும்.

பாரதிதாசன் குயில்!

ஆசிரியர்; **மன்னர் மன்னன்**

பாவேந்தர் சிறப்பிதழ்!

பேணிக் காக்க வேண்டிய அறிவுப் பெட்டகம்.

O பெருஞ்சித்திரன் எழுதும் பாவேந்தர் வரலாற்றுச் சுருக்கம்.

O புலவர், இராமநாதன் எழுதும் **"பாட்டுக்குள் பாவேந்தர்"** என்ற சிறப்புமிக்க இலக்கியக் கட்டுரை.

O பாவேந்தரின் திருவுருவப்படம் அட்டைப்படமாக மிளிர்கின்றது

படித்துப் பயன்பெற வேண்டிய பொன்னிதழ்.

மலர் தனிப்படி 1-75.

விளக்கங்களுக்கு,

பாரதிதாசன் குயில்

புதுவை-1.

"தமிழியக்கம்" எழுச்சி!

-துரை-மாணிக்கம்-

(சென்ற திங்கள் (29-3-68) மதுரை, தியாகராயர் கல்லூரி, மூத்தமிழ்விழாப் பாட்டரங்கத் தலைமை யேற்றுத் 'தமிழியக்கம்' என்ற பொருளில் பாடிய தலைமையுரை இது. தமிழன்பர் அனைவர்க்கும் பயன்படும் வகையில் ஈண்டு வெளியிடப் பெறுகின்றது. பாட்டரங்கத்தின் பிற பாடல்கள் அனைத்தும் தனி நூலாகப் பின்னர் வெளியிடப் பெறும்.

எங்கும் நிறைந்த இறைவன் கழல் வாழ்த்திப்
பொங்கும் அவன்றன் புகழ்வாழ்த்தி உள்ளவுயிர்ப்

பூட்டரங்கம் என்ன உலகோர் உவந்தேற்கும்
பாட்டரங்கம் வாழ்த்தவந்த பைந்தமிழச் சான்றோரே!

வீட்டரங்கம் விட்டு வியன்தமிழில் என்னசுவை
காட்டுகின்றார் பார்ப்பமெனக் காணவந்த தாய்மாரே!

"எந்தமிழ்காண்! எங்கள் இருவழி காண்! உடல்காண்!
அந்தமிழ்தான் எங்களுடை ஆருயிர்காண்! சீர்காண்!

இயக்கங்காண்! எம்வாழ்வுக் கேற்றங்காண்! பூண்காண்!
மயக்கறுக்கும் உள்ளொளிகாண்! மாய்தலிலாப் பண்காண்!

விடிந்ததுகாண் நற்பொழுதும்! வீறுகிளர்ந் தோம்காண்!
பொடிந்ததுகாண் வெம்பகையும்! பூத்ததுகாண் மாட்சி!

எழுந்ததுகாண் எம்கூட்டம்! எங்கெங்கும் தூள்தூள்!
விழுந்ததுகாண் தாழ்ச்சியெலாம்! வீழ்ந்தது காண் மடமை!"
–என்றெழுச்சிப் பண்பாடி ஏறுநடை போட்டுவரும்
மன்றஞ்சேர் கல்விவளர் மாணவர்காள்! மாணவிகாள்!

நீட்டுறக்கம் கொள்ளுகின்ற நீணிலத்தோர் நும்பாடல்
கேட்டுறக்கம் கொள்ளாமல் உள்ளம் கிளர்ந்தெழுந்தே

இன்பம் சிலிர்த்தும் இளைத்தவுடல் பூரித்தும்
துன்பம் தொலைக்கின்ற தொல்பெருமை கேட்டுணர்ந்தும்

நாட்டரங்க வாழ்க்கையிலே நல்வடிவம் கொள்ளவைக்கும்
பாட்டரங்கம் ஏறுகின்ற பைந்தமிழப் பாவலர்காள்!

செந்தமிழ்தான் வெல்லாதோ? இந்தவுல குய்யாதோ?
அந்தமிழ்தான் நம்மையர சாளாதோ? ஈங்கிருக்கும்

மாந்தக் குலமெல்லாம் மண்ணுலகில் விண்சுடர்போல்
காந்தத் தமிழால் கனவுலகம் காணாதோ?

எல்லை பொடிந்தே இருங்கடலும் தான்விலகித்
தொல்லை மடிந்த துயர்மாந்தர் எல்லாரும்

எந்தமிழால் கூடி இசைத்தமிழைப் பாடிநடந்
தந்தோம்தந் தோமெனவே தாளங்கள் போடாரோ?

வாழ்க்கைத் துயரெல்லாம் வன்பொடியாய்ப் போகாதோ?
பாழ்க்கை மனப்பூசல் பாழ்வெளிக்கே ஏகாதோ?

சாதிச் சழக்கெல்லாம் சாத்திரத்தின் பூசலெல்லாம்
ஊதிப் புறந்தள்ளி ஓங்குநிலை காணுரோ?

அற்றைப் புலவரெலாம் ஆங்கொருங்கே வீற்றிருந்தே
இற்றைப் புவிமாந்தர் ஏற்றமிகக் கொள்ளுதற்கே

காட்டிநின்ற நல்வழியைக் கண்ணெடுத்துப் பாராரோ?
வாட்டும் வறுமைக்கே வல்லுறக்கம் வாய்க்காதோ?

கொட்டிவைத்த முத்தளந்து கொண்டுவந்த பொன்னளந்தே
கட்டிவைத்த நற்புகழால் காணியெலாம் தாமளந்த

பாண்டியனுர் மக்கள் பழம்புகழைத் தேராரோ?
மீண்டுமிந்தச் செந்தமிழை மேன்மைப் படுத்தாரோ?

சோழன் அறப்பெருமை சொந்தமெனக் கொள்ளாரோ?
வீழாத தோளான் வியன்சேரன் சீர்த்தியெல்லாம்

பாட்டாகப் பாடிப் பைந்தமிழைப் பாய்ச்சாரோ?
கூட்டாக நின்றியங்கிக் கோடா அறம்வளர்த்துச்

செந்தமிழை வான்தூக்கிச் செங்கதிர்க்கு மேல்நிறுத்தி
இந்தவுல குய்ந்திடவே ஏற்றம் உரைக்காரோ?

வள்ளுவனுர் வாய்மை வழிவழிக்கே நின்றிருக்க,
கொள்ளும் உயர்வாழ்க்கைக் கூறுகளை மக்களினம்

ஏற்று வழிநடக்கும் இன்பநிலை வாயாதோ?
வேற்றூர் அயலர்எனும் வேற்றுமைகள் சாயாவோ?

மண்ணுவல் கொண்டுலக மாந்தர் மடிவதையும்
எண்ணுமல் வாய்மையறம் ஏற்காமல் தீமைசெயும்

வல்லரசப் போக்கை வழிமடக்க மாட்டாரோ?
நல்லரசால் இவ்வுலகை நல்லுலகாய் மாற்ருரோ?

தம்மனைவி தம்மக்கள் தம்வாழ்க்கை தாம் என்றே
தம்மனத்துக் கொள்ளும் தருக்கெல்லாம் வீழாதோ?

இவ்வுலக வாழ்க்கைநலம் எல்லாம்எல் லார்க்குமெனும்
அவ்வுரையெங் காதில்தேன் ஆருகப் பாயாதோ?

காற்றேபோல் செங்கதிர்ப்போல் காருலவும் வானம்போல்
ஊற்றேபோல் மண்ணின் உடைமை பொதுவென்னும்

ஏற்றவுரை என்றன் இருசெவியால் கேளேனே?
மாற்றத்தை என்றன் மணிவிழிகள் காணுவோ?

பூசிக் கழுவிப் புனுகுக் குழைத்திட்டுப்
பாசி உடலுக்குப் பட்டுடைகள் தாமணிந்து

செல்வச் செருக்காலே சீர்த்தநடை போடுகின்ற
புன்மைக் கயவோர்கள் போக்கில் அடிநசுங்கும்

கோடான கோடி ஏழைக் குறுமக்கள்
பாடாகப் பட்டும் பசியடங்க உண்ணாமல்

வெள்ளெலும்புக் கூடாக வீதிப் புறங்களிலே
தள்ளப் படுகின்ற தாழ்ச்சிநிலை சாகாதோ?

புண்ணுக்கே அப்பும் பொடிமா முகத்தப்பிக்
கண்ணுக்கு மையிட்டுக் கார்குழலைக் கொண்டையிட்டுப்

பெண்ணுக்கு வாய்த்த பெருமையெலாம் கால்மிதித்துக்
கண்ணாடிச் சேலையினைக் கால்தெரியக் கைதெரியப்

பின்முதுகு காணப் பிறைவயிறு தோன்றிடவே
முன்னுடுத்துப் போகின்ற முச்சந்தி நாகரிகம்

செந்தமிழப் பண்பாட்டின் சீர்மையினைச் சீய்க்காமல்
வந்தவழி போகுமொரு வாய்ப்பையிங்குக் காண்பேனோ?

முத்துத் தமிழால் உலகம் முழுதளந்தே
எத்திசையும் பேர்மணக்க எந்தமிழர் வாழாரோ?

பூக்காரோ? வாழ்க்கை புதுக்காரோ? நூல்பலவும்
ஆக்காரோ? செந்தமிழால் ஆகாத தில்லையெனக்

காட்டாரோ? வேற்றுலகம் காணாரோ? எந்தமிழின்
பாட்டாலே இவ்வுலகப் பான்மை உயர்த்தாரோ?

ஊர்ஊராய்ச் சென்று, தெருத்தெருவாய்க் கால்நடந்து
வார்கடலைத் தாண்டி வளர்மலைகள் ஏறிப்போய்

வேற்றுநில மாந்தர் விழிப்புறவே நந்தமிழின்
ஊற்றுப் பெருக்கை உயிராம் கலைப்படைப்பைக்

காட்டி மயர்வறுத்துக் காட்சிநிலை சேர்ப்பாரோ?
ஏட்டில் எழுத்தில் இடைநடக்கும் சொற்பெருக்கில்

எந்தமிழின் ஏற்றம் எடுத்தே முழக்கமிடச்
செந்தமிழின் மாணாக்கர் சேர்ந்தொருங்கே செல்லாரோ?

—என்றே பலவாறாய் எண்ணி வருந்துகையில்,
''இன்றே புறப்பட்டோம்! ஏற்றமினி நாட்டுவம்காண்;.

வீணாக்கோம் ஓர்நொடியும்''—என்றே விரைந்தெழுந்து
மாணாக்கர் கூட்டம் மடிதட்டி நின்றதுகாண்'

என்னவடா சொல்வேன்? எடுத்தெங்ஙன் பாவிரிப்பேன்?
முன்னர் தமிழ்க்குடிசெய் மூண்ட தவப்பயனோ?

வள்ளுவர்தம் வாய்மை வளங்கொண்டு விட்டதுவோ?
உள்ளுவர்தம் நெஞ்சமெல்லாம் ஊற்றாய்ப் பெருகிற்றோ?

நக்கீரன் சொல்துணிவும் நற்கபிலன் பாத்திறனும்
ஒக்க இணைந்தவர்தம் உள்ளத்துப் பொங்கினவோ?

பாண்டியர்தம் பூட்கை பனிமலைக்கண் நின்றிருந்து
மீண்டுமிவர் உள்ளத்தே மின்னலிட்டுப் பாய்ந்ததுவோ?

சோழர் குடிப்பெருமை சோர்ந்தயிவர் நெஞ்சகத்தே
வேழப் பெருமுழக்காய் வீறுபெறக் கீண்டதுவோ?

குன்றத்துச் சேரன் குலையாத வில்மறவன்
மன்றத்தே வந்து மறவிதையை நட்டானோ?

யாங்ஙன் பொருள்விரிப்பேன்? யாப்பில் கருத்தெடுப்பேன்?
தூங்காத எந்தமிழர் தோளுயர்த்தி நின்றுவிட்டால்,

ஆழிமுழக் கென்னாகும்? ஆன்றமலை தூளாகும்!
'வாழிதமிழ்' என்றொலித்தால் வாரிதியும் மேற்பொடியும்!

மின்னல் முறிந்தொசியும்! விண்கோள்கள் அற்றுதிரும்!
துன்னும் ஐம் பூதங்கள் தோற்றே அடிவணங்கும்!

வெங்கதிரும் நுண்பொடியாய் விண்டுதிர்ந்து வான்சிதறும்!
பொங்குணர்வு விண்ணெல்லாம் போர்த்துப் புடைநிரம்பும்!
ஊழி பெருக்கெடுக்கும்! ஓங்காரம் சங்கார்க்கும்!
நாழி தவறுமோ? —என்றே நனிமகிழ்ந்து
திந்தோம்திந் தோமெனவே திக்கெட்டும் கால்தாவத்
துந்துபி பாடத் துடிமுழக்கம் ஆர்த்தெழவே
உள்ளம், உயிர், அணுக்கள் எல்லாமும் ஒக்கநின்று
வெள்ளப் பெருக்கேபோல் வீங்கும் பெரும்புயல்போல்
கற்பனை நெஞ்சம் கரைமீறி ஆர்த்ததுகாண்!
சொற்புனைவால் வல்லுணர்வுச் சூர்த்தல் விளக்குவதோ?
ஆர்த்தெழுந்த மாணவரை ஆரத் தழுவி, எனை
ஈர்த்த குளிர்தமிழால் இஃதுரைப்பேன்; கேளீர்;
"தமிழியக்கம் காணத் தலைப்பட்டீர்! வாழ்வீர்!
சிமிழ்த்தெழுந்த தொல்மறவக் கூட்டமே, சீர்த்துவரும்
வேங்கைக் குருளைகளே! வல்லரிமாக் குட்டிகளே!
ஈங்கெழுந்த பேரெழுச்சி இந்நாள் பெருமுயற்சி!
வீங்கிநின்ற குன்றத்தோள் வீழாமுன் —உள்ளத்தே
தேங்கிநின்ற வல்லுணர்வு தேய்ந்து குறையாமுன்:
செந்தமிழை மேல்நிறுத்தி, சீர்த்த பகையழித்தே
எந்தமிழப் பண்பாட்டை, நாட்டை இடைமீட்க
வேண்டி வழுதுகின்றேன்! வெற்றிவந்து வாய்த்திடுக!
ஈண்டெழுந்து நிற்போம் இணைந்து!"

துணையாசிரியர் ஒருவர் தேவை

தென்மொழிக்கு எல்லா வகையிலும் உடன்நின்று பணியாற்றத் திறன்மிகுந்த துணையாசிரியர் ஒருவர் தேவை. அவருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் கீழ்வருமாறு.

கல்வி: புலவர் வகுப்போ, இளங்கலையோ தேறி இருத்தல்வேண்டும்.

அகவை: 25 அகவைக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். திருமண மானவராக இருப்பின் நனறு.

பிறதனித்திறன்கள்: தனித்தமிழ்த்திறம் உடையவராகவும், தமிழ் இலக்கண இலக்கியப்பயிற்சி உடைய்வராகவும், ஆங்கிலத்தில் பேசவும் எழுதவும் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். தமிழ் சுருக்கெழுத்தும், தட்டச்சும் பயின்றவராக இருப்பின் மிகவும் நன்று; அச்சுத்துறையில் ஈடுபாடும், நூல் வெளியீட்டுத் திறனும் இருப்பின் முதல்தகுதி பெறுவர்.

பிற சிறப்பியல்கள்: அஞ்சாமை, ஊக்கம், அறிவுடைமை, ஈகவுணர்வு, கண்ணோட்டம், ஆள்திறன், எளிமை, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, சொல்வன்மை, பொறுப்புணர்வு, பொதுநல வுணர்வு, முதலிய மாந்த மீமிசைப்பண்புகள் கொண்டவராகவும் தம் வாழ்நாள் முற்றும் தமிழ்ப்பணிக்கே தம்மை ஒப்படைப்பவராகவும் இருப்பவரே இவ்வேலைக்கு முற்றும் தகுதியுடையவராகக் கருதப்படுவர். இங்குக் குறிக்கப் பெற்றிருக்கும் பண்புநலன்கள் பெரும்பாலும் அகப்பாடு நிரப்பியவாகலின், இத் திறன்களில் அவர் நுண்ணோக்காக ஆய்ந்தெடுக்கப் படுவர்.

பிற குறிப்புகள்:

1) மேற்கண்ட தகுதி, திறன்களில் எவ்வகைக் குறையும் இலராக ஒருவர் கிடைக்கும்வரை இவ்விடம் காலியாகவே வைத்திருக்கப்படும்.

2) தகுதியுடையவர் கிடைப்பின் அவரை நம் உடனுறை துணை வராக ஏற்றுக் கொள்வதுடன், இக்கால் உள்ள தென்மொழி அமைப்புகளுக்கு மேலாளராகவும் பிற்கால் அமையவிருக் கும் தென்மொழி உலகப் பொதுமன்றினுக்கு அமைப்புச் செயலாளராகவும் அமர்த்தப் பெறும்.

3) வருபவர் திருமணம் புரிந்தவராக விருப்பின் அவருடைய குடும்பநலன்கள் முற்றும் தென்மொழியால் பேணிக் காக்கப் பெறும். அவர் குடும்பத்தாரும் தென்மொழியோடு முழு ஈடு பாடு காட்டுதற்கும் அணுக்கப்படுத்தப் பெறுவர்.

4) தென்மொழி அமைப்புகள் முழுமையும் தமிழ்க்கும், தமிழ்க் குமுகாயத்திற்கும் பிற்கால் பொதுமையாக்கப்பட்டுப்பொது நலம் பேணும் பாழி (ஆசிரம) அமைப்பையொட்டி அமைக் கப்பெறுமாகலின், தென்மொழித் துணையாசிரியராக வர விரும்புவார் அத்தகைய நிலைகளுக்குத் தம்மை உயர்த்திக் கொள்ளும் தன்னாற்றலும், தன்னுண்மையும், தன்னம்பிக் கையும், தன்னல மறுப்பும் கொண்டவராக விளங்குதல் வேண்டும்.

5) இங்குக் கூறப்பெற்ற குறிப்புகள் எல்லாவற்றையும் ஆழ்ந்து படித்து, அவைபற்றி முன்பின் ஆழ்ந்து நோக்கி எமக்கு அவர் கருத்துப்பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் பதிவஞ்சல் வழியாகத் தெரிவித்தல் வேண்டும்.

6) தென்மொழி அமைப்புகளுக்கேற்ற உறுப்பாண்மையோர் எவ்வளவுக்கு விரைந்து கிடைப்பரோ, அவ்வளவுக்கு விரைந்து தென்மொழி உலகப் பொதுமன்று அமைக்கப் பெறும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

—பெருஞ்சித்திரன்

நண்பர்!

(மு. மகிழரசன்)

1. வெற்றெனவே உடன்பழகி வெள்ளறிவால் உரைநிகழ்த்தி
வீண்பெருமை மகிழ்ந்து, வேட்ட(து)
உற்றவிடத் துயர்விருத்தி மற்றவிடத் தயர்வுறுத்தி
ஊறுசெய்ய நண்பர் உள்ளார்!
தெற்றெனவே மனங்கலந்து தெள்ளறிவால் உரைகலந்து
திரிபற்ற நினைவால் தேர்ந்த
நற்கருத்து முன்மொழிய நமக்கொத்த நயத்தக்க
நண்பரில்லை யே! நன் னெஞ்சே!

2. உள்ளவரை உறவாடி உற்றவரை நகையாடி
உவந்தவரை உவப்பு பேணிக்
குள்ளமனம் குளிர்ந்தாடிக் குரங்குமனம் மிகையாடிக்
குறுகிவிடும் நண்பர் உள்ளார்!
எள்ளளவும் திரிபின்றி எவ்வளவும் கரவின்றி
எப்பொழுதும் உறவால் அன்பால்
உள்ளளவும் உவப்புயர்த்தும் ஒப்புடைய நட்புடையார்
ஒருவரில்லை யே! நன் னெஞ்சே!

3. பெயரளவில் நண்பரெனப் பெருமையுடன் திரிவதற்கும்
பெருமதிப்பு கொள்வ தற்கும்
நயவுரையால், புறப்பகட்டால் நாகரிகப் போர்வையிலே
நடிப்பதற்கும் நண்பர் உள்ளார்!
துயரளவால் உளம்சுமந்து துணிவளவால் புலம்நிமிர்ந்து
துன்னுகின்ற இடுக்கண் நீக்கி
உயிரளவில் பழகுகின்ற உயர்வுடைய நட்புடையார்
ஒருவரில்லை யே! நன் நெஞ்சே!

4 சொற்குன்று மேலடுக்கிச் சொந்தமிகும் போல்முடுக்கிச்
சோர்வுற்றுச் சொன்ன சொற்கள்
நெற்குன்று போற்சரியப் புற்கென்று நிலைசாய்ந்து
நெளிந்தொதுங்கும் நண்பர் உள்ளார்!
பொற்குன்று போற்பொலிந்தும், பொறுப்பென்று வேர்பதிந்தும்
பொருளறிந்து திண்மை போற்றும்
நற்பண்பு நலம்மிகுந்த அறிவுணர்வால் நமக்குகந்த
நண்பரில்லை யே! நன் நெஞ்சே!

5. புறமனத்து விளைகின்ற புற்கென்ற விரைவுணர்வால்
புலம்பெயர்ந்து குதிக்கும் போக்கால்
திறந்தினைத்தும் பிறங்காமை திளைக்கின்ற வெற்றூர்ப்பால்
திகழ்கின்ற நண்பர் உள்ளார்!
அறம்நினைத்துச் செருக்கொழிய அறிவுயர்ந்த உள்ளுணர்வின்
அடக்கத்துள் ஆர்த்துத் தூய்மை
நெறிமணந்து செயல்மிகுக்கும் நெஞ்சத்து நமக்குகந்த
நண்பரில்லை யே! நன் னெஞ்சே!

6. வயிற்றுணர்வும் வாயுணர்வும் வளர்ப்பதற்கும், நெறிகெடுத்து
வழிதிருப்பும் புன்மை தீமை
பயிற்றுணர்வும் பாழுணர்வும் படைப்பதற்கும் எந்நாளும்
பக்கத்தில் நண்பர் உள்ளார்!
மயலறுத்து மதிப்புயர்த்தும் மாண்புயர்ந்த செவியுணர்வும
மருளறுக்கும் தெளிவு ணர்வும்
நயப்புறுத்தும் நெறியுணர்வும் கலந்துணர நமக்குகந்த
நண்பரில்லை யே! நன் னெஞ்சே!

7. என்னேயும் வாய்மொழிந்தும் எதுவேயும் நாச்சுவைத்தும்
எனைத்தேயும் மூக்கின் உய்த்தும்
கொன்னேயும் நகையுதிர்த்தும் கொண்டாடி ஊன்வளர்க்கும்
கொள்கையில்லா நண்பர் உள்ளார்!
முன்னுற்றி முழுதுணர்ந்து முதலோடு நுணித்தறிந்து
முடிவோடு கணித் திருந்து
நன்குற்றும் உறுதியுடன் நின்குற்றும் நமக்குகந்த
நண்பரில்லை யே! நன் னெஞ்சே!

8. புதைக்கவல்ல குமுகாயப் புரட்டுகளை, ஏமாற்றுப்
போலிமையை, புறப்ப கட்டின்
குதிக்கின்ற புன்மையரின் குறுமதியை, வஞ்சனையை,
குலப்பிரிவை, கரவை , கூர்ந்து
கொதிக்கின்ற மனக்கடலின் கொந்தளிப்பை, குமுறிவலம்
கொடுஞ்சினத்தை, கொள்கை தம்மை
மதிக்கின்ற உயர்கொள்கை மனமுடைய நண்பர்நம்
மருங்கில்லை யே! நன் னெஞ்சே!

9. வன்னெஞ்சர்நமைவருத்தி வாட்டியதால், வம்பிழைத்து
வலிவொடுக்கும் வஞ்சம் மிக்க
கன்னெஞ்சர் கரந்திழைத்த கொடுமையினுல் குறும்பிழைத்த
கயமையினுல் அல்லற் பட்டுத்
துன்புற்று நடுங்குகின்ற துயர்மனத்துப் பெருஞ்சுமையைத்
துளியேனும் இறக்கி வைத்தே
அன்பரென அழுவதற்கும் ஆறுதலைப் பெறுவதற்கும்
அருகிலில்லை யே! நன் னெஞ்சே!

10. நாமென்றும் தமியானேம் நன்னெஞ்சே! என் செய்கோம்?
நனிகெட்ட இந்த நாளில்
நாமுயர்ந்த உள்ளுணர்வால் நல்லறத்துப் பண்புளத்தால்
நல்லொழுக்கால் நெறியால் என்றும்
நாமுணர்த்தும் மெய்ம்மைமிகு நல்லன்பால் மனக்கருத்து
நாகரிக மாண்பால் நண்பால்
நாமிணையும் தகவுடைய நண்பரென ஒருவரிலர்;
நமக்கொத்தார் இந்நி லத்தே!

தாமசு ஆல்வா எடிசன்
(THAMAS ALWA EDISON)

–கழாத்தலையன்–

காலையிற் கதிரவன் ஒளிக்கதிர்கள் சாளரத்தின் வழியே வந்து தட்டினாலும் எழுந்திருக்க நம்மிற் பலர் விரும்புவதில்லை. ஆனால் ஒரு நாள் விடியற்காலை ஐந்துமணிக்கு உறங்கச்சென்ற ஒருவர் ஏழு மணிக்கு எழுந்து வெளியே வந்தார். அவரைக் கண்ட நண்பர் ஒருவர் 'எவ்வாறுளீர்?' என வினவ, அவரோ "அரைமணி நேரம் மிகுதியாய் உறங்கிவிட்டேன் அதனால்தான் இவ்வாறுளேன். இல்லையாயின் இன்னும் நன்றாகவே இருப்பேன்" என்றாராம். முதுமைப் பருவம் வாட்டிய காலையும் நாளொன்றிற்கு நான்குமணி நேரத்திற்குமேல் உறங்கி அறியாத அப்பெருமகனார்தாம் இன்றைய உலகில் ஒவ்வொருவராலும் போற்றிப் புகழப்படுகின்ற தாமசு ஆல்வா எடிசன் என்பார். ஈண்டு அவர் வாழக்கை வரலாறு காண்குவம்.

தாமசு ஆல்வா எடிசன் என்னும் மின் பேரறிஞர் பிறந்த இடம் அமெரிக்கத்தேயத்தில் உள்ள மிலான் [1] என்னும் நகர் ஆம். அவர் 1874 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 11ஆம் நாளன்று சாமுவேல் எடிசன் (Samuel Edison) என்னும் வணிகருக்கும் நான்சி எலியத்து (Nancy Elliot) என்னும் ஆசிரியைக்கும் மகவாகத் தோன்றினர். அவருக்கு ஒரு தங்கையும் இருந்தாள். எடிசன் தமது இளமையில் படிப்பைத் தம் அன்னையிடமிருந்தே கற்றுக்கொண்டார். அவர் பின்பு நூற்களின்மேல் நீங்கா விருப்புற்றுப் படிக்கும் நல்லாராய் விளங்கியதற்கு அவரின் பெற்றோரின் ஊக்கமும் அன்புமே காரணியமாம். நூற்களைக் கற்க எடிசன் வருத்தப்பட்ட பொழுதெல்லாம் அவர் படித்து முடித்த ஒவ்வொரு பொத்தகத்திற்கும் பணம் கொடுத்து, அவரை நூற்களைக் கற்க ஊக்குவித்தனர்.

எடிசன் பிற்காலத்தில் பெற்ற அறிவிற்கு முன்னோடியாக ஒரு நிகழ்ச்சி கூறப்படுகிறது. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' எனும் முதுரைக்கேற்ப அவர்தம் ஆறும் அகவையிலேயே பொருட்களைக் கருத்தோடு கவனித்தார். ஒரு நாள் அவர் வீட்டிலிருந்த பெரு[2] வாத்தொன்று அடைகாத்ததை

1, Milan.
2. Goose.

உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த அவர் வியப்படைந்து, அதைப்பற்றியே எண்ணமிடலானார். பின்னொரு நாள் நீண்டநேரம் அவரைக் காணாத அவர் பெற்றோர் அவரைத் தேடிய பொழுது, தவசம் காத்து வைக்குமிடத்தில், முட்டைகளின்மேல் முடக்கிச் சுருண்டு படுத்துக்கொண்டிருக்கும் நிலையில் அவர் கண்டுபிடிக்கப் பட்டாராம். அந்த முட்டைகளைத் தொட்டுப் பார்த்த அவர் தந்தையார், அம் முட்டைகளை அவரால் முடிந்தவரைச் சூடாக்கி வைத்திருந்ததாகவும், அச் சூட்டினாலேயே முட்டைகளைப் பொரியச்செய்ய அவர் (எடிசன்) முயன்றதாகவும் கூறினார். எப் பொருளையும் கூர்ந்து நோக்கும் திறம் படைத்திருந்தமையாற்றான் எடிசன் தம் ஆய்வுகளில் பெருவெற்றி அடைய முடிந்தது.

எடிசனின் குடும்பம் மிகவும் நல்குரவால் நலிய நேர்ந்தமையான், எடிசனும் உழைத்துப் பொருள்தேட வேண்டுவதாயிற்று. அவர் தெற்றிராயிடு (Detroit) விற்குச் செல்லும் பெருவழித் தொடர் வண்டிப்பாதை (Grand Trunk Railway) யில் இதழ்கள் விற்கும் பையனாய் அமர்ந்து, தம் ஓயா உழைப்பினாலும், மடியின்மையாலும் பயணிகள் மனத்தைப் பெரிதும் கவர்ந்து, கிடைத்த ஊதியத்தால் வாழ்ந்தார். இந்நகரிலிருந்த நூற்கள் அனைத்தையும்–தக்கது தகாதது எனும் வேறுபாடின்றி–படித்து முடித்தார். ஆனால், நியூட்டனார் (Newton) எழுதிய 'பிரின்சிபியா' (Principia) என்னும் நூல் இவருக்கு விளங்காமையான், அந் நூல் அறிந்த ஒருவரின் துணையால் அந் நூலைத் தெளிவாய் உணர்ந்தார். இப் பொழுதிலிருந்து அவர் வேதியலில் பேருக்கம் கொண்டார்.

வேதியலில் ஊக்கம் கொண்ட எடிசன் தம் காதொன்றையும் இழக்க நேரிட்டது. வேதியல் நூற்பயிற்சிக்கு, வேண்டிய கண்ணாடிக் குழாய்கள், உப்பு (Salt)கள், மருந்துகள் முதலியவற்றை வாங்கி மூட்டை ஏற்ற உதவிய பழம்வண்டி ஒன்றைத் தம் ஆய்வுக் களமாக்கிக் கொண்டார். தம் ஓய்வுப் பொழுதையெல்லாம் செய்ம்முறை ஆய்வு (Experiment) களில் கழித்தார். இவ் 'ஆய்வுக் கள'த்தைத் தாம் இதழ்கள் விற்கும் வண்டித்தொடரில் இணைத்துக் கொள்ள உரிமை பெற்றிருந்தார். இதற்கிடையில் எடிசனே 'பெருவழிப் பன்னன்' (Grand Trunk Herald) என் தாளிகையையும் தம் ஆய்வுக் களத்தினின்றே, தம் அச்சுப் பொறிகளினால் அச்சிட்டு, வெளியிட்டார். ஆனால் இதனை அவர் நெடுநாள்கள் வெளியிட இயலவில்லை, ஆதலின் மீண்டும் பிறர்

இதழ்களை விற்பவராய் மட்டுமே காலங்கழித்தார். இச் சமயத்தில், ஒரு நாள் வண்டித்தொடரின் ஆட்டம் பொறுமையான். அவரின் 'ஆய்வுக் கள'த்தினுள் குப்பி ஒன்றினுள்ளிருந்த எரியம் (Phosphors) என்னும் தீநஞ்சு தவறிக் கீழே விழ, ஆய்வுக்களம் தீவாய்ப்பட்டது. அப்பொழுது எழுந்த தீநாற்றங்களும், கொடிய ஒலிகளும் வண்டியின் காப்பாள (Guard)னைச் சினக்கச் செய்தமையான், அவன் எடிசனின் செவியில், தன் வலிவெலாம் ஒருங்கே திரட்டி, ஓங்கி அறைந்தான். அச் செவி தன் ஆற்றல் இழந்தது. எடிசனும் தம் வாணாளை ஒரு செவிடாகவே கழிக்க நேர்ந்தது. எம மருத்துவமும் அவரது ஊனம்பட்ட காதைத் திருத்த முடியவில்லை.

இவ் விடும்பை கண்டும் உளமும் ஊக்கமும் தளராத எடிசன் மீண்டும் இதழ்கள் விற்கும் சிறுவணுய்ப் பணிஆற்றி வந்தார். இவர் தம் ஓய்வுப் பொழுதில் மின்னுய்வுகளில் பேரார்வம் காட்டினர். புகைவண்டி நிற்குமிடங்களிலெலாம் புகைவண்டி நிலையங்களிலுள்ள தொலைவரி (Telegram)ப் பகுதிகளுக்குச் சென்று, அவற்றைக் கருத்தோடு கவனிப்பார். ஐயம் ஏற்பட்ட போதெல்லாம் ஆண்டுளார்பால் வினக்கள் எழுப்பித் தொலைவரி பற்றிய தம் அறிவை நாளும் மிகுத்து வந்தார்.

பொதுவாக, வண்டித்தொடர் கிளெமெண்சுமல் (Mount Clements) என்னும் இடத்தில் ஏறத்தாழ அரைமணி நேரம் நிற்பது வழக்கமாதலின். அந்நிலையத் தலைவரான மெக்கன்சி (J. U. Mackenzie) என்பாருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை எடிசன் பெற்றார். அவர் மகனான செம்மி (Jemmy) என்னும் சிறுவனுடன் எடிசன் இடையிடையே விளையாடியதுண்டு. ஒருநாள் செம்மி தன்னை மறந்து இருப்புப் பாதைகளுக்கு நடுவே நின்று விளையாடிக்கொண்டிருந்தான ஒரு புகைவண்டி பாதை தடுமாறி அவன் விளையாடிக் கொண்டிருந்த தடத்தின் வழியே மிக வேகமாக விரைந்து வந்தது. சிறுவனோ இதனை அறியான். இதைக்கண்ட எடிசன் தம்முயிரையும் பொருட்படுத்தாது, பாய்ந்து, சிறுவனைத் தூக்கிக் கொண்டு பாதையின் சரிவுகளில் புரண்டார். எடிசனின் மிதியடி ஒன்று பிய்த்துக்கொண்டு சென்றது. எடிசனும் சிறுவனும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

தன் மகன் காப்பாற்றப்பட்டதை அறிந்த நிலையத் தலைவர், அதற்குக் கைம்மாறாக எடிசனுக்குத் தொலைவரி கற்றுக் கொடுத்தார்.

எடிசனும் மிகக் குறைந்த காலத்தில் பயிற்சியை முடித்துக்கொண்டார். பின் அவர் நண்பரான மெக்கன்சியின் முயற்சியால், புகைவண்டிப் பாதையில் இரவில் தொலைவரி அனுப்புபவராய்ப் பணியேற்றார். அவர் மிகத் திறமையாகப் பணி ஆற்றிய போதினும், அவரின் மேலதிகாரியரும், உடன் பணி செய்வோரும் பொறாமை கொண்டமையான் அவர் அவ்வேலையை விட்டு வெளியேற வேண்டியிருந்தது.

எடிசன் தம் இளமைக் காலத்தில் தானாகவே தொலைவரிச் செய்தியைப் பதிவு செய்யும் கருவியொன்றைக் கண்டுபிடித்தார். செய்திகளை அது புள்ளி, வரி (In dots and dashes) வடிவில் பதிவு செய்தது. எடிசன் கண்டுபிடித்த மற்றொரு கருவி செய்திகளை விரைவில் வெளியிடப் பயன்பட்டது.

இதற்கிடையில் அவர் வேலையின்றித் தடுமாற நேர்ந்தது. ஆதலின் மெம்பிசு (Memph is) என்ற இடத்தில் வேலைக்கு அமர்ந்தாராயினும், அவர் பகைவர்கள் அங்கும் தொடர்ந்ததால், அவர் அதைவிட்டு நீங்கவேண்டியதாயிற்று. பின் அவர் உலூயிசுவில் (Louisville) என்ற நகரத்திற்குச் சென்றார். இங்கிருந்துதான் மின்னாற்றலைப் பற்றிய அவரின் முதல் நூல் வெளியிடப்பட்டது.

எடிசன் தம் இருபத்தொன்றும் அகவையில் தொலைவரி (தந்தி) அமைக்கும் முறையில் உண்டாகும் செலவைக் குறைக்கும் ஒரு சிறு வழி கண்டார். இதற்குப்பின் அவர் கரப்பான் பூச்சி (Cockroach) களால் உண்டாகும் தொல்லையைக் களைதற்கோர் எளிய வழியைக் கண்டார். தகரத் தகடுகளைச் சுவர்களில் கயிற்றால் கட்டித் தொங்க விட்டு, அவற்றின்மேல் அப் பூச்சிகள் விரும்பி உண்ணும் சுவை உணவைத் தடவி வைத்தார். அப் பூச்சிகள் ஒருங்கே கூட்டமாய்த் திரண்டு வந்து அவ்வுணவை உண்ணுழி, தகடுகளில் மின் பாய்ச்ச அவை இறந்து பட்டன. இம்முறையால் கரப்பான்களின் தொல்லை ஒழிய, வேலை செய்வோர் இடர்ப்பாடின்றி வேலை செய்தனர்.

இச்சமயத்தில் எடிசன், பாரடே (Naraday) என்னும் அறிவியலறிஞரால் மின்னாற்றல் பற்றி எழுதப்பட்ட நூற்களைப் படித்தார். இது முதற்கொண்டு எடிசன் அவைபற்றியே எப்பொழுதும் எண்ணமிடலானார்.

பாசுடன் (Boston) என்னும் நகரில் எடிசன் உறைய நேர்ந்த பொழுது ஒப்போலை (Vote) பதிவிடும் மின்பொறி ஒன்றைக் கண்டு பிடித்தார். மேலும் பங்கங்காடியில் நிமையத்திற்கு நிமையம் விலை ஏறலும் இறங்கலுமாயிருந்த பங்குகளின் விலையை அவ்வப்போது வெளியிடும் பொறி ஒன்றையும் எடிசன் புனைந்தார். இப் பொறிகளால் எடிசனின் புகழ் யாண்டும் பரவ, மகளிர் கல்விச்சாலை (Ladies Academy) ஒன்றில் மின்னியக்கம் பற்றிப் பேச அவர் அழைக்கப் பட்டார், பேசற் கிணங்கிய எடிசன் தம் ஆய்வுகளூடே, பேசவேண்டிய பொழுதும் நாளும் மறந்து தொலைவரிக் கம்பியொன்றை ஒரு வீட்டின் மிசை அமைத்துக் கொண்டிருந்தார். அவரைக் காணாது தேடிய அவர் நண்பர் ஆதப்சு அவரைக் கம்பி அமைக்கும் நிலையில் கண்டுச் சொற்பொழிவு பற்றி நினைவூட்டினார். இன்னார்முன் தாம் உறையாற்ற வேண்டும் என்பதையே மறந்திருந்த எடிசனே, தூய்மையின்றி அழுக்கேறிய உடைகளுடன் அவையேறினர். தம் உரை கேட்க வந்த நங்கையரெல்லாம் புதுமுறையில் தைக்கப்பட்ட உடைகள் அணிந்திருப்பதைக்கண்டு சிறிதயர்ந்தாரெனினும் தாம் ஆற்றவேண்டிய சொற்பொழிவை அழகோடும் எளிமையோடும் விளக்கமாகவும் ஆற்றி அனைவர் கவனத்தையும் ஈர்த்தார். அறிவுந் திறத்திலே மேம்பட்ட எடிசனே தம் உடை பற்றிச் சிறிதும் கவன்றிலர். ஆனால் நாமோ...?'

எடிசனின் புனைவுகளில் முதன்மையானது அவர் புனைந்த நான் மடித் தொலைவரி (Quadruplex Telegraphy) என்ப. மோர்சு (Morse) என்பார் கண்டுபிடித்த தொலைவரி பல குறைபாடுகளைக் கொண்டிருந்தமையான் அதனை வியத்தகு வகையில் எடிசன் சீர்படுத்தினார். ஒரேயொரு கம்பி வழியாக, ஒரே சமயத்தில் நான்கு செய்திகளை அனுப்பலாம் என்று கண்டு, அதனை எடிசன் மெய்ப்பித்தார். இம் முறையால் செய்தி ஒன்றுடன் ஒன்று கலந்து சீர்கேடு நிகழ்வதில்லை. இம் முறையால் கம்பிகள் அமைப்பதற்கான செலவு பெரிதும் குறைந்தது. இம்முறையால் அமெரிக்கா மட்டும் பெற்ற பயன் ஒன்றரைக்கோடி தாலர் (டாலர்) என்று அறிஞர் கணக்கெடுத்துள்ளாராம்.

எடிசன் தாம் கண்ட இம் முறையை மெய்ப்பிக்க நியூயார்க்கு ஏகினர். நியூயார்க்கில் இருந்த பொன்னின் நிலையை வெளியிடும் (Gold-Reporting Company) குழும்பில் அமைக்கப்பட்டிருந்த, வணிக நிலையை அவ்வப்போது காட்டும் பொறிகள் திடுமெனத் சீர்கேடுற, அவற்றைத் தம்திறமையினால் எடிசன் சீர்ப்படுத்தினார். இதனால் இலாசு

(Laws) என்னும் அக் குழுப்பின் தலைவரால் எடிசன் பெரிதும் கவரப் பட்டார். மறுநாளே தம் பொறிகளை யெல்லாம் மேற்பார்வையிடும் அலுவலில் எடிசனை அத்தலைவர் அமர்த்திக்கொண்டார். எடிசனும் தம் உழைப்பால் இதுவரை வழக்கத்தில் இருந்த, பங்குவிலை பகரும் பொறியினும் உயர்ந்த பொறியொன்றைப் புனைந்து, அதனை ஒரு வணிகக் கழகத்திற்கு விற்றுவிட்டார்.

எடிசன் இலாசுவை விட்டு நீங்கிப் பொன்னிருப்புத் தொலைவரிக் குழும்பு (Gold and Stock Telegraph Company) ஒன்றில் வேலை பார்த்தார். இங்கிருக்கும்போது அவர், பங்குவிலை அச்சிடும் பொறிகளையும், வீட்டில் அமைத்துக் கொள்ளுதற்கேற்ற தொலைவரிக் கருவிகளையும் உண்டாக்கினர் இவற்றை இக்குழும்பிற்கு நாற்பதாயிரம் தாலருக்கு விற்றுவிட்டார்.

இதன்பின் தம் வேலைகளைச் செவ்வனே தொடர்வதற்குப் பேருதவியாயிருக்கும் அனைத் தேந்துகளும் அமைந்த ஒரு தொழிற்சாலையை எடிசன் இத்தொகையால் அமைத்தார். ஈண்டு அவர் தாமியங்கித் தொலைவரிய(Automatic Telegraphy)த்தைக் கண்டுப்பிடித்தார். எடிசன் இத் தொழிற்சாலையில் தாம் கண்ணுறங்கிய நேரத்தைத்தவிர மற்ற நேரமெல்லாம் உழைத்தார். அன்பால் தொழிலாளர்களையும் உழைக்கச் செய்தார். அவரின் அருள்கனிந்த பார்வையும் இன்னொழுக்கமும் அன்பும் அனைவரையும் கவர்ந்தன. தாம் ஒப்புக்கொண்ட வேலையை முடித்துக் கொடுக்காத வரையில் அவர் அமைதியுறுவதில்லை. ஒருகால் பங்கு விலையை அச்சடிக்கும் கருவிகள் செய்து தருவதாய் ஒப்புக்கொண்டார், ஆனால் அவராக்கிய கருவிகள் ஒழுங்காய் இயங்காமை கண்டு திகைத்தார்; ஆனால் அயரவில்லை. தம் உதவியாளருடன் தொழிலகம் புகுந்த எடிசன் கதவுகளைத் தாழிட்டுப் பூட்டிக்கொண்டு, "இப் பணியை வெற்றியாகச் செய்து முடிக்கும்வரை நம்மில் எவரும் வெளியேக முடியாது" என்று தம் உதவியாளரைப் பார்த்துக் கூறினர். அவரும் அவரின் துணைவன்மாரும் ஏறத்தாழ அறுபது மணி நேரம் கடும் உழைப்பை நல்கி வெற்றி பெற்றனர். தாம் கண்ட குறையைக் களைந்து, திறம்படத் தொழிலியற்றும் பொறிகளையே அனுப்பிவைத்தார். என்னே எடிசனின் உழைப்பும் உண்மையும்!

எடிசன் 1873-ஆம் ஆண்டில் மேரி இ. தில்வெல் (Mary E. Stillwell) என்னும் நங்கையைக் காதலித்துக் கடிமணம் புரிந்து

கொண்டார். இவ்விருவருக்கும் மூன்று மக்கள் பிறந்தனர். எடிசன் தம் வாழ்க்கைத் துணையை 1881-ஆம் ஆண்டில் இழந்தார்.

எடிசன் மக்களின் தொல்லைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக நியூயார்க்கினின்று இருபத்திரண்டு கற்களுக்கப்பாலுள்ள மென்லோச்சோலை (Menlo Park) என்னும் இடத்தில் அனைத்து வளமும் அமைந்த, பெரியதொரு தொழிலகம் அமைத்தார்.

பேராசிரியர் பெல் (Professor Alexander Bell) என்பார் இயற்றிய ஒலி மாற்றி (Transmitter)யில் குறை இருந்தமையான் அக் குறையைக் களைந்து, பேசுகின்ற சொற்கள் தெளிவாய்க் கேட்குமாறு ஒலியை அதன் வலிமை குறையாது மாற்றி அனுப்பும் தொலைபேசி ஒலி மாற்றி (Telephone Trans mitter) என்னும் பொறியொன்றை எடிசன் புனைந்தார். இப் பொறியின் உதவிகொண்டு நெடுந்தொலைவினின்றும் பேச்சைத் தெளிவாக மாற்றலாம்.

ஒலி மாற்றியைக் கண்டுப்பிடித்த எடிசனே ஒலிவாங்கி (Rocei - ver)யையும் கண்டுபிடித்தார். இவ் விரண்டின் உதவியாலும் ஒருவர் ஒரே சமயத்தில் தம் நண்பருடன் பேசவும், பேசுவதைக் கேட்கவும் முடியும். எடிசன் ஒலிபெருக்கி (Mecrophone) ஒன்றையும் கண்டு பிடித்தார். ஒரு மூலத்தினின்று பல படிகள் எடுக்கும் எளிய முறை ஒன்றையும் எடிசன் கண்டுபிடித்தார். விரைந்தோடுகின்ற புகைவண்டியிலிருந்து செய்தி அனுப்பும் தொலைவரியையும் எடிசன் கண்டுபிடித்தார்.

அடுத்து எடிசன் புனைந்த கருவி இசைப்பெட்டி (Phonograph) ஆகும். அவர் இக் கருவியை உண்டாக்க முடியும் என்று கூறிய போதெல்லாம் அதனைக் கேட்டு நகைத்து அவரை எள்ளிய மாந்தரெல்லாம் அவர் அக் கருவியைக் கண்டு இயக்கியபோது வியப்படைந்தனர். அவர் ஒரு மந்திரவாணரோ (Magician) என்றையுற்றனர். இக்கருவியால் எடிசன் பெரும்பொருள் ஈட்டினர். இக் கருவி இக்கால் வழக்கிலில்லை என்ற போதிலும் இன்றைய இசைத்தட்டுப்பேழை (Gramophone) அமைப்பதற்கு இதுவே பேருதவி புரிந்தது.

எடிசன் தம் அறிவாண்மையினால், மின்னால் புகைவண்டித் தொடரை இயக்கும் முறையைக் கண்டு உலகிற்குக் காட்டினர்.

சிகாகோ என்னும் நகரில் நிகழ்ந்த பெரும்பொருட்காட்சி ஒன்றில் எடிசன் ஒரு மின்னிருப்புப்பாதையை அமைத்து அதில் ஒரு பொறியை ஓட்டச் செய்தார். எடிசனே மின்னிருப்புப் பாதையை அமைத்து வெற்றிகண்ட ஏந்தல் எனலாம்.

எடிசனைப் பேரிடர்க்கும் கவற்சிக்கும் ஆளாக்கிய அவரின் கண்டு பிடிப்பு மினவிளக்கே! இதை அவரே கூறியுள்ளார். எடிசன், வயவர் (Sir) அம்பிரி தேவி (Humphry Davy) என்பார் கண்டுபிடித்த மின்விளக்கைத் திருத்தி அமைத்தார். எடிசன் பன்னாட்களாய் ஊணும் உறக்கமுமின்றி ஆய்வில் ஈடுபட்டார். ஊக்கம் குறையாது மூவேழு நாட்கள் ஆய்வு நிகழ்த்தி அவ்விளக்கை எரியச்செய்தார். இவர் மூங்கி லால் செய்யப்பட்ட கம்பியால் இவ்விளக்கை எரிய வைத்தார். சிறந்த மூங்கிலுக்காக அவர் உலகெங்கும் தம் துணைவர்களை அனுப்பி வைத் தார். இதற்குப் பின் செயற்கைக் கரியைக் கொண்டே மினகம்பி செய் தார். இக் கண்டுபிடிப்பு முற்றும் அவரையே சார்ந்ததல்ல என்ற போதினும் அவரே அவர் காலத்திற்கு முன் நிகழ்ந்த ஆய்வுகளின் முடிவுகளை எல்லாம் ஒருங்கு திரட்டி முதன்முதலில் மின்விளக்கை நெடுநேரம் எரியவிட்டவர்.

மின்விளக்கை நெடுநேரம் எரியவிட்ட எடிசனே மின்உண்டாக்கி (Dynamo) களையும் செய்தார். இவற்றைச் செய்தற்கெனத் தனி யிடத்தைப் பயன்படுத்தினர் எடிசன். அவர் பல்வேறு ஆய்வுகள் நிகழ்த்தி மின் உண்டாக்கிகளின் ஆற்றலை மிகுதிப் படுத்தினர்.

எடிசனின் ஆய்வுகளும் முயற்சிகளும் பெருகப் பெருக மென் லோச்சோலைத் தொழிலகமும் அவருக்குப் போதாதிருந்தமையான் 1886-ஆம் ஆண்டில் ஆரஞ்சு மலை (The Orange Mountains) அடி வாரத்தில் புதியதொரு தொழில் நிலையத்தை எடிசன் அமைத்தார்.

மாந்தரின் அசைவுகளையும் தொழில்களையும் பதிவுசெய்து படங்க ளாகக் காட்டும் பொறியொன்றைக் கண்டுபிடித்து உலகிற்குக் காட்ட வேண்டும் என்ற எண்ணம் நெடுநாட்களாக எடிசனை உறுத்திவந்தது. அசைகின்ற ஒருருவின் பல்வேறு நிலைகளை அடுத்தடுத்துப் பதிவுசெய் யும் படம் பற்றி (Camera) ஒன்றை எடிசன் புனைந்தார். இப்பொறி, அசைகின்ற ஒருருவின் வெவ்வேறு நிலைகளையும் ஒருநொடி நேரத்தில் நாற்பத்தாறு மேனி படம்பிடிக்கும் வன்மை வாய்ந்ததாயிருந்தது.

இப்படச் சுருள்களை மிக விரைவாகச் சுழற்றி அவற்றின் நிழல் எதிரிலுள்ள ஒரு வெண்திரையில் படும்படி செய்தால் அவ்வுரு வின் அசையும் இயக்கங்கள் ஒரே கோவையாய் இருக்கக் காண லாம். இதுவே திரைப்பட (Cinema)க் காட்சியாகும். மாந்தர்க்கு அறிவுகொளுத்துவான் வேண்டிக் கண்டுபிடிக்கப்பட்ட இக்கருவி இன்று தாறுமாறாய், கடுவன் கை அகப்பட்ட கண்ணி போன்று பயன்படுத்தப்படுகிறது. என்னே இம் மாந்தரின் அறிவுத்திறன்! அசைவுப் படங்கள் உண்டாக்கப்பட்ட பின்னரே அவ்வியக்கத் துடன் ஒலியும் இணைக்கப்பட்டது.

மண்ணிலும் கல்லிலும் கலந்திருக்கும் இரும்பைத் தனித்துப் பிரிக்கும் எளியதொரு வழியை எடிசன் கண்டார். இதற்கென எடிசன் இரு பொறிகளை அமைத்தார். 1895-ஆம் ஆண்டில் ஆக்டென் (Ogden) என்னுமிடத்திலுள்ள சுரங்கங்களில் இவர் இவ்வேலையை முதன்முதலில் தொடங்கினார். பெரும்பெரும் பாறைத் துண்டுகளை உருளைகளின் உதவியால் உடைத்துப் பொடிப்பொடியாக்கிப் பேராற்றல் வாய்ந்த காந்தங்களால் இரும் புத்துகள்களை அவற்றினின்றும் வேறாய்ப் பிரித்தெடுக்கச் செய் தார். அதுமட்டு மன்று அவ்விடத்தில் அமைந்திருந்த கட்டிடங் களை எல்லாம் மின்னாற்றலின் துணைகொண்டு நகரச் செய்தார் என்பதைத் தாளிகையாளர் ஒருவர் அவரைக் காணச் சென்ற போது நடந்த வியப்பு நிகழ்ச்சியால் அறிகிறோம்.

மாந்தனைத் தூக்கிலிடுவதை அவர் வெறுத்தபோதினும் அவர் கண்ட வழியிற்றான் மாந்தன் மின்னைப் பாய்ச்சிக் கொல் லப் படுகிறான்.

இவை எடிசன் கண்ட புதுப்புனைவுகளாகும். எடிசனின் பண்பு நலன்கள் எடுத்துக்காட்டுகளாய் அமைந்தவை. அவர் இறைவ னின்மேல் முடிவற்ற பற்றுக் கொண்டிருந்தார். நாளொன்றுக்கு ஏறத்தாழ இருபது மணிநேரம் கடுமையாக உழைத்தார்! தம் முடன் வேலைபார்த்த துணைவர் மீதும் தொழிலாளர்மீதும் அன்பு பூண்டொழுகினார். எளிமை வாழ்வே இனியது என்று கண்டு அதனையே கைக்கொண்டு வாழ்ந்தார். அவர் களைத்தயர்ந்த பொழுதிலெல்லாம் இசையால் தம்மைத்தாமே ஊக்குவித்துக் கொண்டார்.

எடிசன் எந்த வேலையையும் இழிவென்று கருதி ஒதுக்கிய தில்லை. மின்துறையில் புதியது காண விழைந்த ஓரிளைஞன் எடிசனின் வேதியல் சாலையில் பயின்று வந்தான். தன்னை உயர்வாக மதித்த அவன் எடிசன் இட்ட ஒரு வேலையைச் செய்ய மறுத்து விட்டான், இழிவென்று கருதி. ஆனால் எடிசனே அவனுக்கு அவ் வேலையை ஏவியதற்கு மன்னிப்புக் கேட்டதோடன்றித் தாமே அவ் வேலையைச் செய்து முடித்தார். கண்ட இளைஞன் தன் செயலுக்கு வெட்கி நாணியதோடன்றி அன்றுமுதல் எவ் வேலையையும் இழிவுடைய தென்று கருதுவதை விட்டுவிட்டான்.

தம்முடன் உழைப்பாரிடம் கற்றுத்துறை போகார் குறை காண எடிசன் விட்டதில்லை. ஓரமையம் மின்துறையில் மிகவும் சிக்கலான செய்தியொன்றைப் பற்றிப் பலரும்கூடி அளவை யிட்டுக் கொண்டிருந்தனர். எடிசனின் துணைவர் ஒருவர் பேசுங் கால் தட்டுத் தடுமாறிச் சிலவற்றைத் தவறாகக் கூறிவிட்டார். கேட்டுக் கொண்டிருந்தோர் இஃதை எடுத்துக்காட்டித் தடை செய்த பொழுது எடிசன் குறுக்கிட்டுத் தம் துணைவர் கூறியது சரியே என்று கூறினார். இதனால் ஏனையரும் தங்கள் வாய்களை மூடிக்கொண்டனர். கூட்டம் கலைந்த பின்னர் தம் துணைவரைத் தம்மருகில் அழைத்து அவர் கூறியவற்றிலிருந்த பிழைகளைச் சுட்டிக்காட்டினார். இதைக் கேட்ட அவர் துணைவர், “இவை யறிந்துமா என்னைப் பாராட்டினீர்” என்று வியந்து கேட்டார். எடிசனே ஏதும் நடவாதது போல், “அக் கல்லார்முன் நீவிர் தலைதாழ்த்தி நிற்பதை நான் விரும்பவில்லை.” என்றார். என்னே எடிசன் தம்முடன் உழைத்தார்பால் கொண்டிருந்த பேரன்பு!

எடிசன் கண்ட புனைவுகள் நடைமுறை ‘நாகரிக’ உலகில் சிறப்பிடம் பெற்று வருகின்றன. அவரின் கண்டுப்பிடிப்புகள் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவா நிற்பதைக் காண்கின்றோம். தம் எண்பத்து நான்காம் அகவையில் மாண்ட எடிசனின் புகழ் என்றும் எங்கும் நின்று நிலைக்கும் என்பதில் யாதோர் ஐயப்பாடும் இல்லை. O

ஐன்சுடினின் கோட்பாடுகளுக்கு முரண்பட்ட கருத்துக்கொள்கைகள்.

-தமிழாக்கம்: அ. கு. மணியன், இ. பொ.-

ஒளியைவிட, விரைவு மிகுதியுடன் இயங்குந் துகள்களால் இவ் விண்ணகம் (Universe) நிரம்பி இருக்கலாம் என்ற புரட்சி மிக்க கருத்துக்கொள்கைமுறை, இயல்பியல் அறிஞர்களால் (Theoritical Physicists) இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சில வாய்ப்புகளில் இத்துகள்சள் அளப்டரிய (Infinite) விரைவுடன் இயங்குகின்றன என்று கூறப்படுகிறது.

பிரின்சுடன் பல்கலைக் கழகத்தின் அறிஞர் குழு, தம் தொடக்க ஆய்வில் இத் துகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனுல், இக் கருத்துவழித் துகள்கள் மின்னேற்றம் பெறுதவை எனப் பொருள் அளிக்சலாம் என்று நப்புவதாக, இக் கோட்பாட்டைத் தோற்றுவித்த கொலப்பியா பல்கலைக்சழகத்தின் இயல்பியல் பேராசிரியர் பர்-சிரால்டு ஃபெயின்சுபெர்க் கூறியுள்ளார்.

ஃபெயின்சுபெர்க் கருத்தியல்கள், ஒளியைவிட விரைவான ஒன்று இருக்க முடியாது என்ற அறிவியல் பெரும் புலவன் ஐன்சுடினின் புகழ்மிக்க சார்புக்கொள்கைகளின்று மாறுபடுகின்றன.

போலியான கருத்துகள்:

ஐன்சுடினின் கொள்கைகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ள சமன்பாட்டிற்குப் பொருந்துமாறு, ஃபெயின்சு பெர்கின் கொள்கைகள் விரிவாக்சட்டட்டன. ஆயின், அவருடைய கோட்பாடுகள் சில அறிவியல் அறிஞர்களுக்குப் பொய்யாகக் காட்சியளித்தன. இறுதியில் அமெரிக்க இயல்பியல் குழு தாளிகையான 'பிசிக்கல் ரிவ்யூ' (Physical Review)இல் வெளியிடப்பட்டது.

வழக்கமாகக் காணப்பெறும் மின்னணு, தன் நிலையிலும், ஆற்றலிலும் மாருக (Opposite) இருக்கவேண்டுமென்று கணிதத்தின் அடிப்படையில் 1920-இல் எழுந்த பி. ஏ. எம். இடாரக் அவர்களின் கருத்து ஈண்டு நினைவு கூரத்தக்கது. மேலும், இதைத் தொடர்ந்து அணுவின் பாசிடிரான்' மற்றுமுள்ள இம்மிகளும் முரண்பட்ட கருத்தாக அவர் எதிர்பார்க்கிறுர். இத்தகைய கருத்துவழித் துகள்கள் (Postulated Particle), மின்னேற்றத்திலும் (Electric

Charge), மற்ற பண்புகளிலும் மாறுபட்டு இருப்பினும், தத்தம் பருப்பொருள்களோடு (Matter) ஒத்துள்ளன.

ஃபெயின்சுபர்கால் கருதப்பட்ட துகள்கள், பொதுவான துகள் (Ordinary Particle)களுக்கு மாறுகச் செயல்படுகின்றன. இத் துகள்கள் விரைவுபெறின், தன்ஆற்றலை இழக்கின்றன. ஆனுல், பொதுவான துகள்கள் ஆற்றல் பெறப்பெற விரைவும மிகுதியாகின்றது.

இயல்பியலின் அடிப்படைக் கோட்பாடுகள் மாறலாம்:

ஃபெயின்சுபர்க் கருதப்பட்ட துகள்கள், ஒளிவிரைவின் அண்மையில், தம் விரைவில் குறைந்தும், ஒளிவிரைவைப் பெற்றிடின் தன் நிறையில் சடுதியிலும் ஆக்கம் பெறுகிறது. ஒளிவிரைவைவிட மிகுதியான விரைவு நிலையில்தான் இத் துகள்கள் நிலைத்திருக்க முடியும். ஆனுல் நாம் காணும் துகள்கள் இவ்விரைவு நிலைக்குக் கீழே உள்ளன. ஃபெயின்சுபெர்க் கொள்கைகள் உறுதிப்படுத்தபடின், ஒளிவிரைவைவிட மிகுதியான எந்த விரைவு நிலைகளிலும், ஒருபுள்ளியிலிருந்து, மற்றொன்றுக்கு ஆற்றல் கடத்த வழியில்லை என்ற தற்கால அடிப்படையான இயல்பியல் கோட்பாடுகள் குலைவுறும்.

சிலர் எண்ணுகின்ற வேறு கோள்களின் உயிரினங்களோடு தொடர்பு கொள்ளவோ, அல்லது செலவுத்திட்டம் கொள்ளவோ இது மிகப்பெரிய விண்தடையாக (Cosmic Obstacle)உள்ளது. பால்வழியின் (Milk way galaxy) புறப்பக்கத்திலோ, இப்பருதிக்குழு (Solar System) சார்ந்துள்ள விண்மீன் குழுவிலோ, உயிரினப் பண்பாடு இருக்குமாயின், அவை 100,000 ஒளியாண்டுச் சேய்மையில் இருக்கும். அஃதாவது, ஒளியோ, வானொலிச் செய்தியோ அத்தகைய உலகினின்று நமக்குக் கிடைக்க, 100,000 ஆண்டுகளாகும். விண்வெளி வயவர்களுக்குக் காலம் இன்னும் மிகுதியாகும்.

இடேக்கியான்'கள்:

ஃபெயின்பெர்க் இத் துகள்களை 'டேக்யான்கள்' என்றழைத்தார். கிரேக்க மொழியில் டேக்யான் என்பது 'விரைவு' என்று பொருள் தரும்.

ஐன்சுடினின் விரைவு வரைகளே (Speed Limit) அவருடைய கோட்பாடுகளின் வளத்தை ஆராய ஏழு ஆண்டுகளுக்குமுன் தனக்கு வழிகோலிற்று என்று ஒருநேர்வுரையில் ஃபெயின்சுபெர்க் விளக்கினுர்.

இடேக்யான்களுக்கு நிறை இல்லையெனின் கணிதத்துறையினர் குறிக்கும் கற்பனையெண்ணை மேற்கொள்ளின், ஒளியைவிட விரைவு மிகுதியான துகள்கள் என்று 'இடேக்யான்கள்' நிலையுறுதலை ஐன்சுடினின் சமன்பாடு ஒப்புதல் அளிக்கிறது. இன்றுள்ள ஆற்றல் ஊற்றுக்கள் (Energy Sources) விண்கலத்தை இயக்குகின்ற எப்பெரும் விரைவைவிட, கொள்கை முறைப்படி இடேக்கியான்கள் மிகு விரைவுடன் இயக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

இடேக்கியான்கள் இருப்பதை மெய்ப்பிக்கும் வினா மிகவும் கடுமையானது என்றார் ஃபெயின்சுபெர்க். பிரின்சுடன் ஆய்வு ஓரளவிற்குத் துணை செய்தது மின்னேற்றம் பெற்ற துகள்கள் ஒளிவிரைவைவிட மிகுதியான விரைவுடன் வெற்றிட ஊடகத்தில் (Vaccum Mediam) இயங்க, செரன்கோவ் கதிரியக்கம் உமிழப்பட்டது. ஒளியலைகள், ஊடுறுப்பொருள் (Transparent Material) வழியாகச் செல்லும் போது சற்றுத் தம்விரைவில் குறைகின்றன.

கதிர்வீச்சு:

காமாக் கதிர்வீச்சுபோன்ற ஆற்றல்மிக்க ஒளியலைகள், அணு உட்கரு உடன் நிகழ்த்துகின்ற உள்ளிடை வினைகளால், இடேக்யான்கள் இரட்டை எதிர் மின்னணுக் (Electron pair)களாகத் தோற்றுவிக்கப்படுகிறது என்று கருதப்பட்டது. எனினும், அளப்பரிய விரைவிற்கு (Infinite Speed) இணையாக விரைவாக்கம் பெறும் இடேக்யான்கள் உற்றுநோக்கத் தகுதியான கதிர்வீச்சை (Observable radiation) உண்டாக்கும் வரையில், அவற்றை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும்.

பிரின்சுடன் ஆய்வுக்குழு ஒரு மின்புலத்துடன் ஆய்வு செய்தது. ஆனால், கதிர்வீச்சு கட்டுக்கதையாகி விட்டது. இவ்வாய்வினை நிகழ்த்திய திரு. மைக்கேல் கிருசீலர், இவ்வாய்வுகள் அடிப்படையானவை, வேறு எதுவும் கருதத்தக்கது அன்று என்றார்.

இடேக்யான்களுக்கு மின்னேற்றம் இல்லாவிட்டாலும், அவற்றைக் கண்டுபிடிக்க வழிகள் உள்ளன என்று ஃபெயின்சுபர்க் கூறியுள்ளார். இடேக்யான்கள் இருப்பதற்கான உண்மைகள், அணுப்பிளப்பு ஆய்வில் ஒளிப்படத்தகட்டின் முன்பே மறைந்திருக்கக் கூடும் என்று கூறியுள்ளார்.

நன்றி. 'THE HINDU'

'சொற்பொருள்'-"சான்றோன்"

-விற்கையாளி-

திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்து அம்மையார் திரு. தாயம்மாள் அவர்கள் சான்றோன் என்ற சொல்லின் பொருளை விளக்கியது வரவேற்கத்தக்கது. (தென்மொழி சுவடி ௫, ஓலை ௧௧, ௧௨) தமிழ்நாடு இன்றுள்ள நிலையில் தமிழ்மக்கள் இச் சொல்லின் உண்மைப் பொருளை அறிதல் இன்றியமையாததாகும்.

சான்றோன் என்னும் சொல் சால் என்னும் வேர்ச்சொல் அடியாகப் பிறந்து முறைமையின் வழுவாக் கிளவியாக்கம் பெற்றது. சால்தல், நிறைதல் ஆகும். நற்குணம், நற்செயல்களால் நிறைந்தவர் சான்றோர் எனப்பட்டனர்.

நற்குணங்கள் என்பவை எவை எவை? நற்குணங்கள் பல: அவற்றுள் மறமும் ஒன்றுரும். நற் செயலுக்கும், இம்மறமே வேண்டற்பாலது. இம்மறமின்றி நற்குணங்களும், நற்செயலும் தக்க பயனைத் தாரா.

இடைக்காலத்தே புகுந்த பண்பாடு விளைவித்த கேட்டால் இம் மறம் தரும் பண்பாடு மறைந்தது. நற்குணங்களிலிருந்து அது விலக்கப்பட்டது. மறம் என்பதே தீவினை எனக்கருதினர் போலும். - மறம் என்ற சொல்லே வழக்கொழியும் நிலையும் கிட்டியது. மறம் என்ற சொல்லை வழங்கவே அஞ்சினர் போலும் இடைக்காலத் தமிழ் மக்கள்.

மறம் இருவகைப்படும்: ஆறலைத்தலும், ஆருயிர் கோறலும், குடியலைத்துட்டற்றலும், கொடுங்கோல் ஆட்சியும் மறத்தின் ஒரு வகையாகும். இம் மறம் நன்மை பயவாதது. துன்பமே தருவது. இதனையே மன்னுயிர் துயர்தரு மறவினை என்பர்; இது தீவினை. சான்றோர் என்போர்பால் சாராதது இம்மறம். மற்றொன்று மக்கள் மனம் குளிரச் செய்வது; மக்களுக்கெல்லாம் நன்மை பயப்பது. இந்த மறம் இன்றிக் காத்தல் தொழில் நடைபெறாது. இம் மறத்தில் மேம்பட்டவனையே இளங்கோவடிகள், 'மண்குளிரச் செய்யும் மறவேல் நெடுந்தகை' எனச்சுட்டினர். (சிலம்பு ஊர்சூழ்வரி. 21). அன்பின் அடிப்படையில் அன்பே துணையாக எழுவதுவே இம்மறம். 'அன்பிற்கும் அஃதே துணை' எனத் திருவள்ளுவர் கூறியதின் கருத்தும் இதுவேயாகும்,

அம்மை அவர்கள் எடுத்துக்காட்டிய மறவினங்கள் 'மன்னுயிர் துயர் செய் மறவினையன்று'. மன்னுயிர் காக்கத் தன்னுயிர் தரும் மறவினை. மண்ணைக் காக்க, மக்களைக்காக்க எழுந்த மறம் அறமேயாகும். மன்னுயிர் துயர் செய் மறவினை விலக்கற் பாலது. மன்னுயிர் குளிர் செய் மறவினை ஏற்கற்பாலது. இதுவே சால்பு தரும் நற்குணமாவது.

பழந்தமிழர் பண்பாட்டில் மன்னுயிர் குளிர்செய் மறவினை, மன்னுயிர் காக்கத் தன்னுயிர் நல்கும் மறவினை நற்குணங்களில் சிறந்த ஒன்றாக அமைந்தது; நற்குணங்களுள் முதன்மையும் பெற்றது. வேறுபல நற்குணங்கள் நிறைந்தவராயினும் இம்மறம் அற்றவர் நற்குணம் நிறைந்தோர் ஆகார். சான்றோர் என்ற பெயருக்கு உரியோரும் ஆகார்; இம்மறக் குணமின்றி ஏனைய குணங்கள் செயலற்றன; பயனற்றன. ஆதலின், நற்செயலை நிறுவ, நாட்டைக் காக்க அறத்தைக் காக்க மக்களின் பண்பாட்டைக் காக்க இம் மறம் இன்றியமையாதது. ஆதலின் இம் முதன்மையைக் கருதியே கடவுளர்பாலும், இம் மறத்தை உய்த்தனர். 'செறுநர் தேய்த்த செல்லுறழ் தடக்'கையும் அவருக்கு அளித்தார் நக்கீரர் (திருமுருகாற்றுப்படை). விரிசடைக் கடவுள் திரிபுரம் எரித்ததும் அருள்மறம் என்பர். சமயத்துறையிலும் இம்மறவினைப் பண்பைப் பழந்தமிழ் மக்கள் மறந்தார் அல்லர்.

என்று தமிழன் இம்மறத்தை நற்குணங்களினின்று விலக்கினானோ அன்றே அவன் வீழ்ச்சி தொடங்கிற்று, 'ஏங்கெழில் என் ஞாயிறு எமக்கு' என்ற பண்பாடு பொதுமக்களிடம் புக்கது. தனித் தமிழ்ப் பண்பாடும் குலைந்தது. தமிழன் மறத்தைத் துறந்தான்; அறத்தை மறந்தான்; உரத்தையும் துறந்தான், தன் நாட்டைக் காத்தற்கு, மொழியைக் காத்தற்கு வன்மையற்ற கோழையும் ஆனான்.

தென்மொழி - கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு.
ஆண்டுக் கட்டணம்:	6 உருபா	7-25 உருபா	9 உருபா
தனி இதழ்:	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

திரைப்படக்கொடுமை

—இ. மறைமலை (மு. க.)

"நிமிர்ந்த நன்னடை; நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சா நெறியொடு
திமிர்ந்த ஞானச் செருக் கொடு பெண் பாலர்
திகழ்தல் வேண்டுமாம்; பாடினார் பாரதி;
புதுமைப் பெண்ணைப் படைத்தற் குப் பல
புதுப்புதுக் கனவுகள் கண்டார்; இன்று
புதுமைப் பெண்கள் புறப்பட்டு விட்டார்;
அந்தோ! அந்தோ! என்தமிழ்ப் பண்பே!
புதுமை என்றால் புன்மை அன்று;
புரட்சி என்றால் பிறழ்ச்சியு மன்று;
அறியாப் பெண்டிரே! அருந்தமிழ்ப் பண்பை
மறந்தீரோ! அன்றித் துறந்தீரோ! பழையன
வெறுத்துப் புதியன போற்றும் பண்பிதோ
கல்வி நிலையம், காண்[1]பணிமனைகள்
வண்டி நிலையங் கள், பொது விடமெலாம்
தமிழ்ப் பண்பென ஒன்றைக் கண்டிலேன்;
ஏனிந்தக் கொடுமை; யாரென்ன செய்தார்?
இடையைத் தொடையை இறுக்கிப் பிணைக்கும்
[2]"இறுக்குடை" அணிவதில் இன்பம் இளைஞர்க்கும்;
அரைகுறை ஆடை காற்றில் பறத்தல்,
அழகின் வாயில் ஆரணங் கினர்க்குத்
திரைப்படம் செய்த கொடுமையய்யா!
குறைப்பட் டென்ன கொள்ளப் போகிறீர்!
மேனாட் டாடை அணிவகை பலவும்
தானாய் அறிந்து தமிழர் பின்பற்ற
ஆசான் யாரே? திரைப்படம் அன்றோ?
முன்னைத் தமிழர் தெய்வமாய்ப் போற்றிய
அன்னைக்குலத்தை இழிவு படுத்தும்
வண்ண வண்ணச் சுவரொட் டிகளாம்!
வண்டமிழ் நாட்டுத் தெருக்களில் பாரீர்!
விலைமகள் விடுதியைக் கொலைஞரின் கதையைக்
"கலை"எனச் சொல்லிப் படமாய்ப் பிடித்து
உலகெங் கணுமே உலாவரச் செய்குவர்;
அமெரிக்க, பிரித்தா னியச் செல் வர்கள்;
அறியாச் சிறுவர் அருந்தமிழ் இளைஞர்
வெறியாய் அலைந்து திரைப்படம் பார்ப்பர்;

மக்களாட்சி இலக்கணம்

-புலவர். தி. நா. அறிவுஒளி-

குடிமக்களின் விருப்பப்படி அவர்தம் கருத்துக்கிசைய மக்கள் நலனைப் போற்றி ஆளும் அரசே குடியரசு எனப்படும்.

பெரும்பாலோர் கருத்துக்கு ஓரளவு கண்ணிய மதிப்பு குடியாட்சியில் இருக்குமெனினும், சிறுபான்மையோர் நலனும் பேணப்படுவதே மக்களாட்சியில் அமைந்த தனி மாண்பாம். தனி மாந்தர் நலன்பேணி, மன்பதை நலனோம்பும் இயல்பே மக்களாட்சியின் அடிப்படை "வேர் இலக்கணம்!"

(முன்பக்கத் தொடர்ச்சி)

வறிதே போக்குவர்; வாழ்வை; பணத்தை!
"அரைகுறை அலங்கோ லங்களால் ஆங்கிலத்
திரையுல கேபெரும் பொருள்பெறல் ஏனோ?
மக்கள் மகிழும் கவர்ச்சியா லன்றோ?
தக்கதோர் வழியால் நாமும் தழைப்போம்;
மிக்க கவர்ச்சியை இங்கும் நுழைப்போம்;
என்றே துணிந்தார் என்தமிழ்க் கலைஞரும்!
சொல்ல இயலுமோ? சொல்லில் அடங்குமோ?
திரையுல கிங்கு இழைக்கும் தீங்கை;
சின்னஞ் சிறுவர் சிறுமியர் பலரும்
"சிஞ்சினுக் கடி;லவ் பேர்ட்சு" என்றும்
"அன்பே வா!" "முத்தம்தா!" என்றும்
பிள்ளை வயதிலே பிதற்றி நிற்பது
திரையுல கிழைத்த தீங்கே யன்றோ?
தண்டமிழ்ப் பண்பைத் தமிழரின் உயர்வைக்
கொண்ட திரைப்படம் கொள்கை முரசமாய்
ஒன்றே யாயினும் வெளிவந் துளதோ?
அன்னைத் தமிழே! உன்னைப் போற்றும்
நல்ல படங்கள் வரும்நா ளென்றோ!

---

1 OFFICES,.
2 "TIGHTS"

குடியாட்சி குறித்து 'சான். டி.இரிட்டு' என்றஅமெரிக்கர், "தனி மாந்தனுக்குரிய மதிப்பும் சிறப்பும் அளிப்பது குடியாட்சியின் அடிப் படைக் கொள்கைகளில் ஒன்றாகும். இவ்வடிப்படைக் கொள்கைத் தொடர்புள்ள வரையில், அது கட்டுப்பாடில்லாத முடியாட்சியிலிருந் தும், ஏனைய வல்லாண்மை முறைகளிலிருந்தும் முற்றிலும் மாறுபட்டு விளங்குகிறது. குடியாட்சியில்லாத மன்பதைகளில் தனிப்பட்டவன அரசின் பெருமைக்கும், வலிமைக்கும் உள்ளாக்கப் படுகின்றான். அவன் கடவுளால் படைக்கப்பெற்ற மாந்தனுக்குரிய உரிமைகள் யாவற்றையுமோ அல்லது சிலவற்றையோ இழந்த ஒரு தனியாள் ஆகிவிடுகிறான். ஒரு பெரிய இயந்திரத்தில் பொருத்தப்பட்ட-வேண்டு மானால் வலுக்கட்டாயமாய்ப் பொருத்தப்பட்ட-ஒரு சிறு உறுப்பாகிவிடு கிறான்.

"குடியாட்சியின் முறைப்படி ஒரு மாந்தனுடையசிறப்பு அவனுக் குப் பிறரால் அளிக்கப்பட்டதன்று; சட்டத்தின் வழி வந்ததுமன்று; மாந்தன் என்ற முறையில் அஃது அவனுடைய பிறப்புரிமையாகும். தனி மாந்தனுடைய மதிப்பு, அறமற்ற கொடுங்கோலாட்சியால் தாக் கப்பட்டுக் குறையலாம்; அல்லது, ஒவ்வொருவருடைய உரிமைகளையும் கடமைகளையும், மற்றவர்கள் மதிக்கும் உரிமை மன்பதையில் வாழ்வ தால், அம்மதிப்பு வளர்ந்து பயனளிக்கவும் செய்யலாம்.

"குடியாட்சியில் ஒவ்வொரு தனி மாந்தனும் இன்றியமையாத வனாவான். அவனுடைய நலன் தன்னிலேயே இன்றியமையாதது. குடியாட்சி முறையின் கொள்கைகளின்படி, மாந்தனின் உயிர் மிக மதிப்புள்ளது. அஃது அரசைக் காட்டிலும் மிக இன்றியமையாதது. உண்மையான குடியாட்சியில் செல்வமும், இயந்திரங்களும், மற்ற ஏற்பாடுகளும் மாந்தனுடைய நலனுக்குப் பயன்படும் அளவிற்குத் தான் இன்றியமையாதவையாகும்.

அரசு, மக்கள் கருத்தின்-நன்மையின்-எதிரொலியாகவே அமைய வேண்டும் என்பதை இது தெளிவாக்கும்.

நம் நாட்டரசு குடியரசு என்று கூறப்படுகிறது. 'தேசீயம்' என் றும் 'ஒருமைப்பாடு' என்றும் முழக்கப்படுகிறது; இம்முழக்கத்தின் கூச்சலில் மாந்தர் நல உரிமைகள் நசுக்கப்படுகின்றன. ஒவ்வொரு குடிமகனின் உயிரும் மதிப்புடையது என்பதை மதிக்காமல் சுட்டுத் தள்ளுதல் முதலிய கொடுமைகள் மக்களாட்சி நாட்டில் நிகழலாமா?

சட்டம் என்பது மக்கள் நலனைக் கருத்தில் கொண்டே ஆக்கப் பெறவேண்டும். அரசின் தன்னலத்திற்காகவோ, ஒரு கூட்டத்தார் நலனுக்காகவோ அமைதலாகாது.

சட்டம் என்பது மக்களால் செய்யப்படுவது; மக்களுக்காக இயற்றப்படுவது. சட்டம் கடவுள் அன்று! சட்டம் மக்கள் விருப்பத்திற்கேற்ப மாறக்கூடியது; வளர்ச்சியுறுவது.

'சட்டம், சட்டம்' என்று பேசி ஓரிருகட்சியினர் பொதுமக்களை மருட்டுகின்றனர்; ஏமாற்றுகின்றனர்; அச்சுறுத்துகின்றனர்.

'சட்டம்' எவ்வாறு இயற்றப்படவேண்டும் என்பதை சான். டீ. இரீட்டு அழகாக விளக்குகிறார்: "சட்டங்கள் மக்களின் வேண்டுதல், நம்பிக்கை, உள்ள உணர்வு ஆகியவற்றை ஒட்டியே உண்டாகின்றன என்பது உண்மையாகும். குடியாட்சி முறையில் மக்களுக்காக மக்களால் இயற்றப்படும் சட்டங்களில் உடன் பிறப்பு மனப்பான்மை எதிரொலிப்பது இயல்பு"

அனைத்து நாட்டுமக்களின் உரிமை ஆவணத்தில் கீழ்க்கண்ட உரிமைகள் தரப்பட்டுள்ளன. "ஒருவரும் காரணமின்றிக் குற்றவாளியாக்கப்படவோ, சிறையிலடைக்கப்படவோ அல்லது நாடுகடத்தப் படவோகூடாது. ஒவ்வொருவனுக்கும் தன் நாட்டின் எல்லைக்குள் எங்கும் தன்னுரிமையாய்ச் செல்லவும் குடியிருக்கவும் உரிமையுண்டு. ஒவ்வொருவருக்கும் எண்ணம், மனச்சான்று, சமயம் ஆகியவற்றில் உரிமையோடிருக்க உரிமையுண்டு. ஒவ்வொருவருக்கும் உரிமையாகக் கருத்துகளைக் கொள்ளவும் கூட்டங்கூடவும், இயக்கம் அமைக்கவும் உரிமையுண்டு.

–இந்த உரிமைகள் நம் நாட்டு அரசியலமைப்புச் சட்டத்திலும் உண்டு. ஆனால், நடைமுறையில் செயற்பாட்டில் நிகழ்வது என்ன?

மக்களின் உரிமைகள் பல படிகளில், பல நிலைகளில். பல முறைகளில் மறுக்கப்படுகின்றன; சிதைக்கப் படுகின்றன. பொது மக்கள் இதனை எண்ணிப்பார்க்க வேண்டும். நாட்டை ஒருசிலர் தன் மனம் போனவாறு ஆட்டிவைக்க எண்ணலாமா? செயற்படலாமா? ஆட்சியாளர், மக்களைத் தம் அடிமைகளாக எண்ணி நடத்தல் பெருந்தீமையாகும்.

இங்கிலாந்து நாட்டை எதிர்த்து இசுகாத்துலாந்து மக்கள் தலைவர் இராபர்ட்டு புருசு என்பார் தலைமையில் போர்க்கொடி உயர்த்தினர். (1306-1315) அப்போது அவர் கூறிய உரை கருத்தில் பதித்தற்குரியதாம்: "எங்களில் நூறுபெயர் உயிருடன் இருக்கும்வரை நாங்கள் அடிமையராக இருக்க இசையோம்! ஏனெனில், புகழுக்காகவோ, பொருளுக்காகவோ, பெருமைக்காகவோ நாங்கள் போரிடவில்லை. ஆயின், உரிமைக்காகவே நாங்கள் போரிடுகிறோம். நாணயமுள்ள எவனும் தன்னுயிர் உள்ளளவும் உரிமையை இழக்க விரும்பான்!"

—இதே கருத்தையே நாம் இற்றைத் தமிழர்க்கும் உலகினர்க்கும் கூறுகிறோம்.

தமிழினம் பல கோணங்களில் பலகாலமாக அடிமைப் படுத்தப் பட்டுச் சீர் குலைக்கப்பட்ட இனமாகும். இலக்கியம், அரசியல், மொழி. பொருளியல், சமயம், வாழ்வியல், தகுதி, பணித்துறை, கலைத்துறை, அறிவியல், வாணிகம், முற்போக்கு அமைப்புகள் என்ற பலவற்றாலும் தமிழினத்தார் நசுக்கப்பட்டனர்; புறக்கணிக்கப்பட்டனர். இன்று ஓரளவு முன்னேறும் உணர்வுபெற்று அறிவுநெறிவாழ முற்படும்போது பலவகைத் தடைகள், குறுக்கீடுகள் எழுதல் எத்துணை கண்டித்தற் குரியவை! அரசியல், மக்கள் எழுச்சிக்கு, இசைந்து செல்லவேண்டுமே யொழிய அடக்கி ஒடுக்குதல் தீதாம்!

1828-ஆம் ஆண்டு ஆண்ட்ரூ சாக்சன் என்ற அமெரிக்கக் குடியாட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கொள்கைகளைப் பரப்பியவர் சியார்சு பரங்கிராப்டு, என்பவராவார். சாக்சனின் வரலாற்றை எழுதியவர் இவர். அவர்,

"மேன்மைசால் அரசினைத் தாங்கி நிற்பது பொதுமக்களே யொழிய ஒருசிலர் அல்லர்; மக்களே யன்றி சொத்தன்று; உரிமையாய் வளரும் பொதுமக்களின் கருத்தேயன்றி அதிகாரமன்று; சட்டத்தின் உண்மையான நோக்கம் பொதுமக்களின் இன்பமே யாகும். தங்களுடைய நன்மையை உணர்ந்து அதைத் தாங்களே காக்க எழுந்து நிற்கும் பொதுமக்களின் கூட்டத்தாலேதான் அதை அடைய முடியும்" என்று எழுதுகிறார்.

அமெரிக்கக் குடியாட்சி குறித்து எழுதப் பெற்ற இக்கருத்து பொதுக்கூற்றமைதியால் நம் நாட்டரசியலுக்கும் பொருந்துவதே. தமிழின் உரிமைக்குக்கேடு சூழும் சட்டங்கள் வரலாமா? அஃதை ஏற்கு மாறு "சிலர்" கூறலாமா? கூறுவது அறிவுடைமையா? அறமா? பண்பாடா? குடியாட்சி நெறியா?.

பொதுமக்களுக்கும், வருங்காலத் தலைமுறையினர்க்கும் துன்பந் தரும் எந்தச் சட்டத்தையும் ஒழிப்பதே அரசியல் அறம்.

குடியாட்சி என்று போலியாகப் பெயர் சூட்டிக்கொண்டு வன்கண் முடியாட்சி நிகழ்த்தும் நாடுகள் சிலவும் உலகில் உள. இவை வழியில் நம்நாடு நடைபெற்றால் ஒன்று பிறநாட்டுக்கு நம்நாடு அடிமையாகும். இன்றேல் நிலையாக உளநாட்டுப் போரும்-பூசலும்-அமைதியின்மை யும்-இகலுமே நிலைபெற்றுவிடும்! நாடு காடாகும்! வாழ்வு பாழாகும்!

தாமசுபெயின் என்ற அமெரிக்க அறிஞர், "பல அரசியல்முறை கள் குடியரசு என நடிக்கின்றன. + போலந்து தனது ஆட்சியைக் குடியரசு எனக்கூறிக் கொள்கிறது. ஆனால், அங்கே தேர்ந்தெடுக்கப் பட்ட மன்னர், மரபுவழிச் செல்வர்களோடு ஆள்கிறார். ஆலந்தும் தனது ஆட்சியைக் குடியரசு எனக் கூறிக் கொள்ளுகிறது. ஆனால் மரபுவழிமுறைத் தலைவனும், பெரிதும் செல்வர் குழுவும் அங்கே ஆள் கிறது," என்று "மாந்தருரிமைகள் இரண்டாம் பகுதி" என்ற நூலில் கூறுகிறார். அதே நிலை இந்தியாவில்-வெளிப்படையாகத் தோன்றாமல்-கரவு நிலையில்-உள்ளது! உண்மையான மக்களாட்சி யென்பது 'சிலர் ஆட்டிவைப்பது போல' ஆடும் அரசால் உண்மையாக உருவாக்கவிய லாது!

ஏழையர், எளியவர், அறியார், கல்லார், ஆய்வாற்றலிலர், கய வர் என்பார்பால் காசுகொடுத்து 'ஒப்போலை வேட்டை'யாடி ஒரு கட்சி தேர்தலில் வெற்றி பெற்றதாலேயே மக்களை மதிக்காத மனப்பான்மை அமையுமாறு இன்றமைந்த சூழ்நிலை நாளைத் திண்ணமாகமாறும்! அறிஞர் மாற்றிவிடுவர்! மக்களுக்காகவே ஆட்சி! மக்களுக்காகவே சட்டம்! மக்களுக்காகவே அரசியலமைப்பு! மக்களுக்காகவே அமைச்சவை! மக்களுக்காகவே பாராளுமன்று, சட்டமன்றெல்லாம்! மக்களுக்காகவே வரையறை; சட்டம் ஒழுங்கு; அமைதி முறைகள்; எல்லாம்!

ஆட்சித் திமிர்பிடித்த வெறியர் இவ்வுண்மைகளைத் தெள்ளத் தெளிவாக அறியவேண்டும்! குடியாட்சி முறையும் இலக்கணமும் மக்களால் நன்குபுரிந்து கொள்ளப்பட வேண்டும்! அரசின் குற்றத்தை நீக்கி நடுநிலை நெறியை வாழவைக்கச் சான்றோர் முன்வரவேண்டும்! முனைந்து துணிந்து முன்வரவேண்டும்!

ஆள வருபவர் மக்களுக்காகவே நாம் இப்பணியில் அமர்த்தப் பெற்றிருக்கிறோம் என்று நொடிதோறும் நினைந்து நினைந்து நேரிய சீரிய வழியில் இயங்கவேண்டும்! மக்களை ஆட்டுமந்தையென மதிக்கும் மதிகெட்ட மனப்பான்மையே அரசாட்சியை அழிக்கும் அணுக்குண்டாகும்!

அரசினர் என்றால் ஆட்டிவைப்போர் என்றும், மக்கள் என்றால் பொம்மலாட்டப்பாவைகள் என்றும் பொருளன்று. மக்கள் விருப்பம், கருத்து, பண்பாடு, நன்மை ஆகியவற்றை நிறைவேற்றி வைக்கும் அமைப்பே அரசு! இது தெளிவாக உணர்த்தப்படுதல் வேண்டும்!

† தாமசுபெயின் வாழ்ந்த காலத்து நிலைமைபற்றிய குறிப்பு இ:்.து.

ஆசிரியர்:
மன்னர் மன்னன்

○ பாவேந்தர்பாடிய 'குயில்' பாவேந்தரைப் பாடுகிறது!
○ 'நினைவுமண்டபம்' படியுங்கள்!

தனி இதழ் 75 காசு.
ஆண்டுக் கட்டணம் 10 உருபா.

பாரதிதாசன் குயில்
புதுவை-1,

தனித்தமிழ் எழுத்தாளர்க்கு...!

—புத்திரங்கோட்டை சா. நடராசன்—

1. ‘தென்மொழி’யில் தமிழ்ச்சிட்டில்
தீந்தமிழிற் பாட்டெழுதும் திறமிக் கோரே!
நன்மொழியாம் வன்மொழியாம்
நலமார்ந்த பொன்மொழியாம் நறுந்தேன் அன்ன
இன்மொழியாம் தமிழெழுதும்
இனியவர்நீர் பிறவேட்டுக்(கு) எழுதுங் காலை
புன்மொழியாம் வடமொழியைப்
புகுத்தியெழு துவதும்ஏன்? புகல்வீர் ஐயா!

2. ஆடரங்கிற் காதலனும்
அணைத்தவனம் மங்கையுடன் அண்ண னுக்க்
கூடரங்கம் மற்றொன்றில்
குழைந்துருகி நடிக்கின்ற கூத்துப் போல
ஏடுகளுக் கேற்றவகை
எழுதுவதும் ஈட்டுவதும் என்ன கொள்கை?
பீடுநிறை தனித்தமிழில்
பிறர்க்குவழி காட்டும்நீர் பிழைசெய் தல்ஏன்?

3. தமிழ்நாட்டில் வெளியாகும்
தாளிகைகள் தமிழுக்குத் தளைகள் அல்லால்
தமிழ்வளர்ச்சிக் கில்லை! அவை
தம்வளர்ச்சி, பொருளீட்டத் தகுவளர்ச்சி,
இமைப்போதும் தமிழர்நலம்
எண்ணாத இழிவளர்ச்சிக்(கு) இயங்கும் ஏடே!
அமைவாக நீரமர்ந்தே
ஆய்ந்தக்கால் அறியீரோ? அறிந்தி ருப்பீர்!

4. நுனிப்புல்லே மேய்ந்துமொழி
நுண்மாண்கா ணாதசில நோக்கம் கெட்டோர்
தனித்தமிழில் நனித்திறமை
தாமெய்தா தேதேதோ சாற்றக் கேட்டோம்!

'தனித்தமிழில் உயிரில்லை
சமற்கிருதம் கலந்தக்கால் சரியாம்' என்பார்;
தனித்தமிழில் உயிரில்லை
என்பவனுக் குயிரில்லை! தலைக்குள் இல்லை!

5. பிறமொழிசேர்த் தெழுதுவதைப்
பிழைப்பாகக் கொண்டோரே பெரிதாய் இங்குச்
சிறப்பாக இதழ்நடத்திச்
சீருற்றார் திரளாகச் செல்வ முற்றார்!
நறவொழுகும் தமிழாலே
நலம்பெற்றோர் அத்தமிழ்க்கு நலிவே செய்தார்!
உறவென்ன இவரோடே
உலுத்தரிவர் நடத்தும்புல் லிதழ்க ளோடே!

6 தூசனைய இவரிதழ்க்குத்
தூய்மையிலாக் கலப்புமொழிப் பாடல் தந்தால்,
காசளிப்பார்! மிகச்சிறந்த
'கவிஞ'ரெனப் பரிசீவார்! 'கலைவா ணிக்கு
மாசிலாத் தொண்டரிவர்
மண்டைக்குள் தெய்வமருள் வைத்த' தென்பார்!
'பேசுபுகழ் அத்தனையும்
பிறவியிலே பெற்ற'தெனப் பெருமை செய்வார்!

7. இத்தகைய பெருமைக்கா
என்னருமைப் பாவலர்கள் இனிமை விஞ்சித்
தித்திக்கும் தமிழுக்குத்
தீவைக்கும் பிறமொழியைச் சேர்க்கின் றார்கள்!
முத்தெடுத்தும் என்னபயன்
மூழ்கியவக் கடலுக்குள் மூச்சி ழந்தால்!
எத்தகைய புகழ்வரினும்
என்னதமிழ் அன்னைக்கே இழுக்குண் டானால்!

8, தூயதமிழ்ப் பாட்டெழுதச்
சொற்கிடைக்க வில்லையெனில் துருவிக் கற்க
ஆயவழி நாடுவதே
அறிவுடைமை! மொழிப்புலமை அற்றார் யாப்புக்

கோயிலுக்குள் நுழைவானேன்?
குப்பைகளைக் குவித்துமொழி கொல்லு வானேன்?
நோயெல்லாம் எந்தமிழ்க்கு
நும்மனையர் செய்புன்மை நூல்க ளன்றோ!

9. இன்றுவரும் பயன்கருதி
இப்பணியைத் தொடர்தலினும் இறத்தல் மேலாம்!
நன்றுமது பேருரைக்க
நாளைவரும் தமிழகத்து நாயும் நாணும்!
வென்றின்று "தென்மொழி"யார்
விதைத்ததனித் தமிழ்கிளைத்து வேரெ டுத்து,
மன்றங்கள் மனைக்கூட
மாடங்கள் யாவிலுமே வளரக் காண்மின்!

10. இனியொருவர் தமிழ்நாட்டில்
இக்கலப்பு முயற்சிகளில் ஈடு பட்டு
நனிவாழ்க்கை நடத்துவது
நாட்கனவு! முடைநாற்ற நடையை மாற்றித்
தனித்தமிழ்ல் இலக்கியங்கள்
தாளிகைகள் படைப்போரே தழைத்தற் கேலும்!
கனித்தமிழப் பாவலரீர்
காட்டுங்கள் இவர்க்குவழி கண்திறந்தே!!

அடுத்த இதழ்...!

அடுத்து வரும் இதழ் 'பாவேந்தர்' சிறப்பிதழாக வருவதால் பாவேந்தர் பற்றிய சிறப்புக் கட்டுரைகள், பாடல்கள். நிகழ்ச்சிகள், குறிப்புகள், அவர் பாடல்களின் ஆய்வுரைகள் முதலியன வரவேற்கப்பெறுகின்றன. உருப்படிகள் யாவும் இம்மாத இறுதிக்குள் கிடைக்கப் பெறுதல் வேண்டும்.

அமைச்சர்.



மேகலை

எண்ணிப் பாருங்கள் !!

அன்புடையீர் அகம்நொந்து விழிகளில் நீர் மல்க மக்கள் எண்ணத்திற்கு இன்றையத் திரைப்படக் கலையின் நிலைப்பற்றிய இம்மடலை வரைகின்றேன். தீங்குநெறி பரவாமல் மாண்புநெறி தவழச்செய்து நல்லறிவை தழைக்கச் செய்வதுதான் கலையே தவிர, தரங்கெட்ட முறையில் தீங்கு நெ(வெ)றியைப் பரவச்செய்வது கலையன்று. இது குமுகாயக்கொலை மட்டுமன்று; திரைக் கூத்தர் பிழைக்கும் வழியைத் தேர்ந்தெடுத்த முறை.

இயற்கைக்கும் உண்மை வாழ்க்கைக்கும் முரண்பாடு கொண்ட காட்சிகளையும், கவர்ச்சிகளையும் காட்டிக் காசு பறிக்கும் கழியறை இழிவாளர்தாம் இன்றையத் திரையுலக முன்னணிப் பாடகர்களும் கலைஞர்களும். மக்கள் தொண்டரென்றும், கலைத்தொண்டரென்றும் கூறிக்கொண்டு, திரைபடத் தெரிவையரின் அரைப்பட ஆடையுடன் அணைத்திடும் அருவருப்பான காட்சிகளிலும், இடையைப்பிடித்தாடும் மேல்நாட்டு இழிதகை நடனங்களிலும் தோன்றுவதுதான் இன்றைய திரையுலகக் கலையா? சட்டையின் மடிப்புக்கலையாமல் சண்டைபோடும் காட்சியெலாம் காட்டி மக்களை அறிவிலிகளாக்கும் நிலைதான் இன்றையக் கலை.

இத்தகைய புன்மைநிலை உண்டாக்கும் திரைப்படப் புரைஞர் களின் போலிகளை நம்பி இடம் பதிவுசெய்து கொண்டு படம் பார்க்கும் நண்பர்காள்! நன்றாக எண்ணிப் பாருங்கள். வீணர்கள் மெச்சியுரைக் கும் வெற்றுரையை ஆழ்ந்து பாரீர்! அதில் சூழ்ந்திருக்கும் பொய்மை களை எண்ணிப் பாரீர்!

தாய்மைக்கும், தூய்மைக்கும், பெண்மைக்கும், பண்புக்கும் களங்கம் செய்யும் முறையில் தரங்கெட்டுத் தாறுமாறாகப் பாடல்கள் எழுதும் பாடலாசிரியர்களின் வரிகளைப் பொருளுணர்ந்து பாருங்கள்.

"தாவணியோடு பாவாடை
தலையில் நிறைந்த பூவாடை
பார்த்ததும் படிப்பு வரவில்லை
பள்ளிக்குச் செல்ல மனமில்லை"

மாணவ. மாணவிகளுக்கு மானமில்லை என்று மறைமுகமாகக் கூறப்படுவது புரியவில்லையா? பள்ளிக்குச் செல்வது படிப்பதற்கா அல்லது இக் கோமாளிகள் கூறியபடி காம விளையாட்டிற்கா?

கழிசடை இதழ்களை நம்பிக் காசுகளை இழிஞர்களுக்குக்கொண்டு போய்க் குவிக்கும் மாணவ, மாணவிகளே கொஞ்சம் எண்ணிப் பாருங் கள்.

"ராத்திரியிலே தூக்கமில்லையே
அத்தான் என்றாளாம்!
நானிருக்கிறேன் அச்சமென்னடி
அன்பே என்றானும்.

அடி ஆத்தா மங்காத்தா
அவ இருட்டிலே எதைப் பாத்தா
.........அத்தை மவன்தான் அணைச்சுக்கிட்டான்
அம்மாடி என்றாளாம்."

இது முன்னணிப் பாவலர் பாடிய பாடல். அதே இழிஞரின் மற்றொரு பாடலையும் பாருங்கள்.

"அடி லல்லா லல்லா லல்லா எல்லாரும் வாருங்கடி
இந்த லாலா பேட்டை ஜால்ராக் கட்டையை நல்லா பாருங்கடி"
"அடி லல்லா லல்லா லல்லா நல்லா பாருங்கடி

மூக்கறுத்து கயிறு மாட்டிடுவேன் முன்னுல் வாருங்கடி
லாலாபேட்டை ஜால்ராக்கட்டை எப்படி இருக்கும்காட்டட்டுமா''

ஐயகோ! இத்தகைய இழிந்த நிலைக்கா தமிழ்ப் பாடல்கள் தரங் கெட்டுப் போகவேண்டும்? தோழர்காள்! எண்ணிப் பாருங்கள். மக்க ளின் சுவைக்கேற்பத்தான் படங்களை எடுக்கின்ருர்களாம்(!) அப்படி யென்ருல் இதைத்தான் சுவைக்கின்றீர்களா?

''காதுகொடுத்துக் கேட்டேன்—ஆஹா
குவா குவா சத்தம்—இனி
கணவனுக்குக் கிட்டாது—அவள்
குழந்தைக்குத்தான் முத்தம்.''

இதை எழுதியவர் தம் வீட்டில் விளையாடுவதை வெளியில் இப்படியா விளக்க வேண்டும்? யாவரும் அவர்போல் இருப்பார்கள் என்ற நினைப்போ?

''ரசிக்கத்தானே இந்த அழகு-கொஞ்சம்
ரசனையோடு வந்து பழகு
பசிக்குத்தானே இந்த உணவு-கொஞ்சம்
பழகிப் பார்த்தபின்னே விலகு.''

''இதழை விரித்தது ரோஜா
எடுத்து அனுபவி ராஜா
ரசிகன் நீ அல்லவா
இன்பத்தைக் கிண்ணத்தில் எடுத்துத் தரவா.''

காசையும் கொடுத்து விட்டுக் காம உணர்ச்சியையும் பெருக்கிக் கொள்ளவா படம் பார்க்கிறீர்கள்? அவ்வாறென்ருல் ஏன்மீண்டும் பழந் தமிழகத்தைக் காணவேண்டு,மென்று வேண்டுகிறீர்கள்? கண்டந் துண்டமாக்கித், தூள் தூளாக்குங்கள். அன்னைத் தமிழை மண்ணைத் தோண்டிப் புதைத்து விடுங்கள். போகட்டும் பண்பாடெல்லாம், அழிந்து ஒழியட்டும் அழகுத்தமிழ் புகழெல்லாம். தமிழே போனபின் தமிழர்களான நாமிருந்து என்ன பயன்? நாமெல்லாம் எந்த மொழி யில் பேசிக்கொள்வது?

எண்ணிப் பாரீர்! ஏமாந்து விடாதீர்! எழில் மலரை எறிந்து விட்டு எருக்கமலரைச் சூடிக்கொள்ள நாமென்ன பித்தர்களா? குயிலின் இசையினை இகழ்ந்து கோட்டானின் குரலுக்குச் செவிசாய்க்க நாமென்ன அறிவிலிகளா?

தேனமுதக் கிண்ணத்தில் நஞ்சு வார்க்க நாமென்ன வஞ்சகர்களா? அல்லமே!

பகட்டாய் வாழும் பரத்தையர் நடிப்பதா கலை? பெண்ணுக்குரிய பண்பாட்டை மண்ணில் மூடி மறைப்பதா கலை? ஆடை குறைந்த காட்சிகளைப் படத்தில்காட்டிப் பணத்தைப் பறிப்பதா கலை? கலையை வளர்க்கும் கலையரசியென்றும், நடிப்புக் கலைக்கு இலக்கணம் வகுத்தவ ரென்றும் மலையெனப் புகழும் மதியிழந்தோர்கள் வலிந்து நிறைந்திருந் தால் குமுகாயம் வளர்ந்திடுமா? திருந்திடுமா? அறிவுள்ள மக்களிதை ஆய்ந்திடல் வேண்டும். விரைவிலே அதற்கொரு முடிவைக் கண்டிடல் வேண்டும். இன்று இந்நிலையை இவ்வாறே விட்டுவிட்டால் இனிவரும் இளைஞர் வாழ்வைக் குலைத்திடும் என்பது திண்ணம். நமக்கேன் இந்த வம்பென்றிருந்தால் நாளைய மக்கள் நம்மைக் காறி உமிழ்வார்கள் என்பது உறுதி.

மணம் கமழும் மலரை நாடும் வண்டு மலத்தையா நாடும்? அல்லவே! அதேபோல்தாம் மதிநிறைந்த மக்கள் நாம் மானங்கெட்ட முறையில் வாழ்வோமா?

தோழர்களே! தெளிவுள்ளவர்களே! தங்களின் தாள்பணிந்து வேண்டிக் கொள்கிறோம்! பழந்தமிழகப் பண்பாட்டை மீண்டும் பார்க்க வேண்டுமானால் திரைப்படத் துறையைச் சீர்த்திருத்த முன் வாருங்கள் என்று அன்புடன்வேண்டிக் கொள்கிறோம். வாழ்க தனித்தமிழ்! வளர்க தங்கள் தொண்டு.

—சி. பூ. மணி, சீராமபுரம், சென்னை-21.

யாருக்கு அரசியல் தெரியாது?

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். தென்மொழியில் எழுதிவரும் ஆசிரியவுரைகள் நிகழ் காலத்தில் பயனளிக்காமல், சிலர் பலர் வெறுப்புக்கும் காழ்ப்புகளுக்கும் இடங்கொடுத்து வரினும் எதிர்வில் தமிழக மறு மலர்ச்சிக்கும், தன்னரசுக்கும், தன்னாட்சிக்கும், பொதுவியல் மாந்தரின் உயர்விற்கும் பயனளிக்கும் என்பது பனிமலையன்ன உறுதி ஆதலின் அற்றைய நாள் நினைந்து இற்றைய நாள் இடுக்கண் பலவரினும் இம்மி யும் தளர்வு கொள்ளாமல் தனிநடையிட வேண்டுகின்றேன்.

தென்மொழியிடமும் அதனைச் சார்ந்தாரிடமும் அரசியலறிவும் அதனைச் செயல்படுத்தும் ஆற்றலும் இல்லையென வாய்ப்பறைபறையும் வல்லடிமைகள் வழிதிருப்பிவிட வியலாது எனினும் கட்சியரசியல் பேசுங் கசடர்களுக்கும், போலி ஒருமைப் பாட்டுப் புனைவேற்றிருக்கும் புல்லர்களுக்கும், அரசியல் நாடகமாடுங் கோமாளிகளுக்கும் அவ்வப்போது நாம் ஒருசிலவற்றை எழுத்துகள் மூலம் எடுத்துணர்த்தக் கடமைப் பட்டுள்ளோம். தென்மொழிக்கு அரசியல் தெரியாது என்று கூறுங் கோமாளிகளுக்கு 'அரசியல்' என்ற சொல்லுக்கே பொருள் தெரியாது என்று வருந்தி' அவர்பால் கழிவிரக்கங் காட்டக் கடப்பாடுடையோம். ஏனெனில் தென்மொழி இக்கால் எழுதிக்கொண்டு வருவதெல்லாம் அரசியல் பற்றியதன்று. தமிழ்மொழியின் தனித்தன்மைச் சிறப்புப் பற்றியும்; அதற்கு உரிமை நல்கப்பட வேண்டும் என்பது பற்றியும்; பிறமொழி, நாடு, இனம் இவற்றின் ஆளுகைக்குள் ஆட்பட்டு விடக்கூடாது என்பது பற்றியுமே, இப்போது தமிழ் மக்களுக்கும் தமிழக அரசுக்கும் உணர்த்திக் கொண்டிருக்கிறது. எனவே தென்மொழி எழுதுகின்ற எழுத்துகள் மொழி பற்றிய அரசியலேயாகும். ஒரு நாட்டின் நாகரிகம், பண்பாடு, அரசியல், பொருளியல் போன்ற எத்துறையும் மொழிவழிதான் அமையமுடியும். மொழியின் செப்பக்குறைவாலும், திரிபாலும், பிறமொழிக் கலப்பாலும் தாழ்ந்த நிலையைத் தமிழ் எய்திவிடக்கூடாது, என்பதைக் கருவாகக் கொண்டே தென்மொழி இயங்குகின்றது. தென்மொழி இன்னும் பொதுவான அரசியல் பற்றிக்கூட எழுத முயலவில்லையென்றுதான் கூறவேண்டும். அதற்குள்ளாகவே தென்மொழிக்கு அரசியல் தெரியாது என்று ஆங்காங்கே சிலர் புலம்புவது ஏனோ?

பண்டையக் காலத்தில் அஃதாவது இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழன் எல்லாத்துறையிலும் மேம்பாடுற்று விளங்கியதற்குரிய சான்றுகள் வரலாற்று ஏடுகள் சிறப்பாக இல்லையென்பது வெள்ளிடைமலை. ஆயினும் அவற்றையெல்லாம் கழகக் காலத்து எழுதப்பட்ட இலக்கிய இலக்கணங்களின் செப்பமும் சொல்வளமும் நமக்குச் சான்றுகளாக விளங்குகின்றன என்பதைத் தமிழறிந்த யாவரும் அறிவர். அன்று தமிழின் தனித்தன்மையே உலகில் தலைசிறந்து விளங்கத் தலையாயகரணியமாக விருந்தது. அந்தநிலையை மீண்டும் தமிழகம் எய்தவேண்டுமென்பதே தென்மொழியின் தணிடா வேட்கை. இதனை உணர்ந்தும் உணராதுபோல் நடிக்கும் நாடகப் போலிவாழ்வுடையாரின் நடிப்பு மிகுவிரைவில் மீண்டும் எழப்போகும்

விடுதலைப் போராட்டத்தால் வெளிப்படுத்தப்பட்டு, பிரஞ்சிலும் உருசியாவிலும் கண்டிராத அளவுக்கு இழிவு படுத்தப்படும். எனவே இனி விடுதலை வேட்கைகொண்டு எழப்போகும் தமிழ் உள்ளங்களின் உணர்வுகளையும் அதன் வழித்தாய உரிமையையும் வற்றடித்துவிட முடியாதென மீண்டும்மீண்டும் தென்மொழி எச்சரிக்கத் தயங்கப் போவதில்லை.

உணர்வுப்பித்தன், உணர்வகம் விராலிமலை, தி.பி ௩௩ சுறவம் ௨௩.

ஆரியர் துணிவு...!

தமிழ்த்திருவோங்கிய ஆசிரியர்க்கு வணக்கத்துடன் எழுதுவது:

ஐயா,

அண்மையில் சென்னையிலுள்ள "கன்னிமேரி நூலகம்" சென்றிருந்தபோது அங்கு "எழுத்து" என்ற மாத வெளியீட்டிதழைப் பார்த்தேன். தங்களுக்கு முன்பே அத் தாளிகையைப் பற்றித் தெரிந்திருக்குமோ? என ஐயுற்று நான் நெஞ்சக் கொதிப்புடன் இதனை எழுதுகிறேன்.

நடந்து முடிந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் வி. ஐ சுப்பிரமணியம், க. சந்தானம், ஐராவதம் மகாதேவன் போன்றோரின் சொற்பொழிவுகளே சிறப்பானவை என்ற கருத்தில் அவற்றைப் போற்றியும், தமிழுக்கென சிறிதளவேனும் பேசத் துணிந்தாரை எள்ளியும் எழுதியுள்ளது அத் தாளிகை. மேலும், அத்தாளிகையின் பழந்தொகுப்பைப் பார்த்தபோது அவ்வாரியக்கும்பல் தமிழ்க்குச் செய்துவரும் தீங்கறிந்து நெஞ்சம் துடித்தேன்.

சிலப்பதிகாரக் கதையில் பல இடங்களை மாற்றி எழுதி கண்ணகியை இகழ்ந்து "ஆரியப்பண்பே சிறந்தது" என்றும் வெளிப்படையாக நாடகம் என்ற பெயரில் எழுதியுள்ளனர். அம்மட்டோ? தமிழால் பிழைத்துத்திரியும் அன்னார் திறனாய்வு என்ற பெயரில் எழுதியுள்ளவற்றைக் காணுந்தோறும் நெஞ்சம் குமுறுகின்றது.

தொல்காப்பியத்தை இகழ்ந்தும், கழகநூல்கள் இலக்கியமாகா வென்றும், திரு. வி. க. வின் நடை பொருளற்ற சொற்திணிப்பென்றும், மு. வ. வின் புதினங்களைச் சிறப்பாகக் கூறுவது தவறென்றும், மறைமலையடிகள் எழுதியுள்ளது தமிழா என்றும், பாவேந்தரைப்

பழித்தும் எழுதித் தனித்தமிழ்ப் போற்றுவோரை எள்ளி நகையாடிய தோடன்றித் தமிழுக்குப் பாரதியாராலேயே இலக்கியம் கிடைத்ததென்றும் அதற்குப் பிறகு தமிழிலக்கியத்தை வளர்த்து வருவோர் ஆரியக் குப்பலே (கு. ப. ரா., வ. ரா,, லா. மௌனி, தி, சானகிராமன், பி. பிச்சமூர்த்தி, க. நா. சுப்பிரமணியம், சி. சு. செல்லப்பா போன்றோர்) என்றும் துணிந்து எழுதியுள்ளனர்.

இந்நிலையிலேதான் தமிழகத்திலே நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் தமிழ்ப் பகைவர்களும் வையாபுரிப் பிறங்கடையினரும் பெரும் பங்கு ஏற்றனர். பாவாணரும் ஏனைய மறைமலையடிகளார் வழித் தமிழறிஞரும் புறக்கணிக்கப்பட்டனர். இவற்றை ஓர்ந்துணராத பலர் தி. மு க. வின் எல்லாச் செயல்களுக்கும் தலையாட்டிப் புகழ்மாலை சூட்டாதது "தென்மொழி" செய்யும் பெருங்குற்றமெனக் கூறித்திரிகின்றனர். புகழுரைக்கும் இகழுரைக்கும் மதிப்பளியாத 'தென்மொழி" ஒன்றே தமிழுக்குத் தக்க காப்பரணாக விளங்கி வருவதை மயக்கமுற்ற தமிழர் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் நாளென்றோ என எண்ணி நெஞ்சுருகி வருந்துகிறேன்.

தி' பி கக மீனம் உக
அறங்கண்டநல்லூர்.

இவ்வாறு,
அன்பன் அ. தெ. இரகோத்தமன்.

தொடர்க! வெல்க!

தொடங்கும் நற்பணியாற் புன்கண் விளையும்;
குடிகெடுத் தவனெனப் போபல கிட்டும்;
தூசெனக் கருதுவர்; தொல்லைகள் ஈவர்;
ஏச்சினை ஏற்க; எஞ்ஞான்றும் விடாது
புன்னெறி நீக்கித்தமிழ்க் குமுகாயம் வாழ
நன்னெறி காட்டுக; பிரியும் உயிரைக்
கசக்கும் மருந்தும் பிழைக்கச் செய்யும;
அசயா மலைபோல் எதிர்ப்பில் முன்னேறுக;
'**தென்மொழி**' யாற்றும் சீரிய பணியை
நமமககள் விழைவர்; ஏற்பர்; சோாவின்றி
நடுநிலை கொண்டு நற்றமிழ் பரப்புக;
தொடர்க; தமிழ்திகழ்ந் தவனைச் சாடுக;
கணித்துப் பார்க்கும் காலம் நெருங்கிடும;
புனித வழியெனப் பற்றுவர்; உனறன
நெறியில் குமுகாயம் உய்யும்;
சிறக்கும்; இன்னிலில் வெல்லும் பணியே:

தென்மொழி அன்பன், மு. வில்லவன், திண்டுக்கல்.

ஒரே முடிவு!

அருமைத் தமிழுக்குப் பெருமை பல சேர்க்கும் பெருந்தமிழ்ப் புலவ! வணக்கம். தங்கள் நுண்மாண் நுழை புலத்தினை யான் பெரிதும் பாராட்டுகின்றேன். தங்களின் ஆசிரியவுரைகள் அனைத்தும் பொன்போல் போற்றத் தக்கன மாற்றுரை மருளச்செய்வன. அறிவுக் குருடர்களைத் தெளிய வைப்பன. தமிழ் நன்மக்களுக்கு உணர்ச்சியும்எழுச்சியும் ஊட்டும்தகைமையன. தங்கள் கனவுகள் யாவும் நனவாகப் போகும் நாள் தொலைவில் இல்லை. தங்களுக்குப் பக்கத்துணையாக இருக்க நாங்கள் உள்ளோம். தங்களின் அயராத் தமிழ்த் தொண்டிற்கு எங்கள் உயிரையும் தர அணியமா யிருக்கின்றோம். தென்மொழியையும் தமிழ்ச்சிட்டையும் எங்கள் இருவிழியெனப் போற்றிக் காத்து வருகின்றோம். முளும் தமிழ்ப்பகைக்கு நாங்கள் ஒரு முடிவுகட்டியே தீருவோம். இஃது உறுதியினும் உறுதி. இன்றுள்ள அரசை நாங்கள் எதிர்பார்க்க வில்லை. எத்தனை எத்தனை இடர்ப்பாடுகள் நேரினும் கவலை கொள்ளோம். கண் துஞ்சோம் வாழ்க தனித்தமிழ்! வீழ்க நரி இந்தி!! —கதிரொளி, பரிவில்லிக்கோட்டை, கோவில்பட்டி.

தமிழரை ஒன்று கூட்டுக!

பேரன்புச் சான்றீர்!

கனிந்த கைகூப்பு. பன்னலமும் பொலிக! தங்களால் வெளியிடப்பெறுகின்ற தென்மொழித் திங்கள் தாளிகையை எங்கே நிறுத்திவிடப்போகின்றீரோ என்று என்உள்ளம் அஞ்சுகின்றது. அருள்கூர்ந்து எவ்விடுக்கண் வரினும் காலங்கடந்தாலும் வெளியிட்டு உதவுங்கள். தென்மொழியின் சிறப்பை நாடெங்கும் உணர்த்தி மிகுதியானோரை வாங்கிக் கற்றுத் தனித்தமிழ் வளம் பெற உதவுமாறு செய்யச் செயலாற்றி வருகின்றோம். எவ்வாறாயினும் திருச்சி மாவட்டம் துறையூரில் கூட்டப்பட விருக்கின்ற தமிழ்ப் புலவர் மாநாட்டின்நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்குப் பொருளுதவி செய்திட உறுதிகொண்டுள்ளோம். தென்மொழி, தமிழ்ச்சிட்டு விற்பனை முகவர்களின் முகவரிகளையும், நேயர்களின் முகவரிகளையும் உடனே எமக்கு எழுதி விடுத்திடுங்கள். தென்மொழி, தமிழ்ச்சிட்டு இரண்டிலும் தமிழ்வளர்ச்சியில் நாட்டங்கொண்ட மன்றங்கள், (தமிழகம் முழுவதுமுள்ள) தமிழ்ப் புலவர்கள், கலைஞர்கள், பாவலர்கள் தமிழன்பர்கள் அனைவரையும்

என் முகவரியுடன் தொடர்புறுமாறு செய்யுங்கள் (இக்கருத்தினைத் தென்மொழியிலும் தமிழ்ச்சிட்டிலும் வெளியிட்டு உதவுங்கள்.) –செ. முத்துஅடிகள், அமைப்பாளர், தனித்தமிழ்க் கழகம் கோட்டத்தூர் (அஞ்) (வழி) புத்தனும்பட்டி, திருச்சி மா. வ.

தென்மொழிக் காவல!

காற்றிடைச் சருகாய், சேற்றிடைப் புழுவாய், மொழியுரிமை மறந்து, நம்மை நத்திப் பிழைக்கும் ஆரியப்பார்ப்பனர் காலிடை வீழ்ந்து, அடிமைத் தனத்திற்கு ஒருமைப்பாடு எனப் பெயரிட்டுத் தம்மைத்தாமே தாழ்த்தித் தீதும் நன்றும் பிறர்தர வாரா என்பதனை மெய்ப்பிக்கும் வகையில் தீமையை–அடிமையினை-தமக்குத் தாமே ஏற்படுத்திக் கொண்டு வாழும் (?) மூடரிடை உரிமை வேட்கையை உணர்த்தும் உயர்தனிச் செம்மலே! நண்பரொருவர் உதவியினல் தென்மொழி இதழினைப் படிக்கும் பேறு பெற்றேன். நும் உணர்வெழுச்சியினையும், நம் கடமையினையும் கண்டு ஆர்த்தெழுகின்றேன். நும் பணிவளர, தென்மொழி காக்கப்பட, என் மனத்தில் தோன்றும் வழிகளை மெத்தவும் பணிவுடன் படைக்கின்றேன். ஏற்புடையதாயின் மகிழ்கிறேன்.

(1) இன்று தமிழகத்தில் மொழியுணர்வு கிளர்ந்தெழுந்துள்ள வேளையில், மொழியின் பெயரைக் கூறிக்கொண்டு குழுகாய நச்சுப் பிண்டங்கள் பல தமிழரிடை குறிப்பாக மாணவரிடைப் பிளவை உருவாக்கி வருகின்றன. தேசீய மாணவர் தமிழ் வளர்ச்சி (?) என்றும் இன்ன பிறபெயர்களிலும், மாநாடு போன்றவை நடத்தி, ஒன்றுபட்டுள்ள தமிழக மாணவரிடைப் பிளவை ஏற்படுத்த முனைகின்றன. உரிமை வேட்கையினையும் மொழியுணர்வையும் இழந்திருக்கின்ற அப்பாவி மாணவர் பலரைத் தம்பக்கம் பலவழிகளிலும் ஈர்க்கின்றன. அவற்றிற்குத் தக்க சூட்டுகோல் எனும் அளவு தமிழரின் தனித்தன்மை பற்றியும், அவரிடை ஆரியர் கலந்தமை பற்றியும், இற்றைக்கால நிலைபற்றியும் பல கட்டுரைகள் வடித்தல் வேண்டும்.

(2) எங்கள் சேரை மாநகர் உட்பட்ட பல இடங்களிலும், தமிழாசிரியர் (!) பலர் தம் வயிற்றினைக் கழுவுமாற்றல், தமிழ் பற்றியும், தமிழகம் பற்றியும் தப்பானக் கருத்துகளைக் கூறிவருதல் மூலம் மாணவரிடையில் தமிழன் ஒரு தனி இனம் என்பதனையே

மறுத்து உரைக்கின்றனர். இவையல்லாமல் தமிழின் பெயரால் மன்றமமைத்து அதனைப்பார்ப்பனிய பலிபீடமாக்கி அங்கேபார்ப் பனரையழைத்து உரையாற்றச் செய்து, இல்லாத தேசியத்தினைப் பற்றி, ஏதேதோ உரையாற்றச் செய்கின்றனர். இந்நிலை மாற் றப்பட ஊருக்கு ஊர் "தமிழ்மன்றம்" உருவாக்கப்பட்டுக் குறிப் பிட்டகால அளவிற்கொருமுறை தமிழக விடுதலையின் இன்றி யமையாமை பற்றியும், இந்திவல்லாண்மையின் இன்னல்கள் பற் றியும் உரை நிகழச் செய்தல் வேண்டும்.

(3) அண்மைக்காலத்தில் நான்கேட்ட உரை யொன்று "பாரததேவி ஆர்த்தெழுந்து நிற்றல் போன்று நம் தேசப்படம் உள்ளது. அதில் காசுமீரம் முடி! உத்தரப்பிரதேச பிராமணர்கள் முகம் போன்றவர். இருபுறமும் உள்ள இருகைகள் சத்திரியர். கால்கள் (தமிழகம்) சூத்திரர்கள் என நம் பழங்கதைகளும், வட மொழி நூற்பாக்களும் கூறுகின்றன. எனவே தமிழர்களாகிய நாம் (!) பிரிவினைபற்றிப் பேசுதல் 'பாரத மாதா'வின் கால்களை வெட்டிக் கால்மட்டும் தனித்து வாழ்தல் போன்றது" என்பதா கும். இதுபோன்ற பூசலுரைகள் முறியடிக்கப்படல் வேண்டும். அஃதைத் "தென்மொழி"யால் தான் செய்ய முடியும். செய்வீர்களா? அஃதல்லாமல் இந்துசமயம்தான் 'பாரததேவி' என்றும் பகர் கின்றனர். அதுமூலம் எம்போன்றோரைச் சமயச் சண்டைக்கு இழுத்து நம்முள் குலப் பிளவை ஏற்படுத்தி மோதவிட்டுவிட்டுத் தம்முடைய பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாளுகின்றனர். இவர் தமக்குத் தங்கள் விடை என்ன? அவ்விடை மூலம் இவர் தமக்கு வாய்ப்பூட்டு இடுவீர்களா?

(4) எவர் எப்படி நம்மைப் பிரிக்க முயன்றாலும் நாங்கள் (பார்ப்பனர் ஏற்படுத்திய குலச் சண்டையினால் குமுகாயத்தில் தீண்டப்படாதவர்களாகவும், தாழ்த்தப்பட்டவர்களாகவும் இன் னல்பட்ட அந்நிலையில் இந்துசமயம் நீங்கி நிகரமை, உடன் பிறப்பாண்மை தரும் இசுலாமிய சமயத்திற்குச் சென்ற தமிழி னத்தவராகிய நாங்கள்) உறுதியிழக்க மாட்டோம். வேங்கடம் முதல் குமரிவரை பரவிக்கிடக்கும் தமிழ் மறவர் படையின் வலி மையை யுணர்ந்து தமிழ்க்கொடியின்கீழ் ஒன்றுபட்டுப் போராடு வோம். நாம்இந்துவாக இருந்தாலும், இசுலாமியராக இருந்தாலும், கிறித்தவராக இருந்தாலும் மொழியின் பெயரால் மொழியினைக் காத்திட, மொழியுரிமை பெற்றிட ஒன்றுபடுவோம்.

இறுதியாக ஒன்று! இன்னுயிர் ஈந்தும் "தென்மொழி" காப்போம். இவ்வழியில் தூய்மையான, கலப்பற்ற மொழியுணர்வுடன், எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கம் முழக்கி, எங்கள் அண்ணன், இணையற்ற தமிழ் மறவன இராசேந்திரன் தீக்குளித்த செம்மல் சினனச்சாமி, சிவலிங்கம், அரங்கநாதன் பெயரால் ஆணையிட்டு ஒன்றுபடுவோம். இந்திக்குச் சாவோலை தீட்டியே தீருவோம் என உறுதிமொழி எடுப்போம்! வாழ்க தென்மொழி! வாழிய தமிழர்!

சேரன்மாதேவி. நெல்லைமாவட்டம்.
25—3—68

இவண்,
இரா. முகம்மது.

அரசியல் கோமாளிகள்!

—உணர்வுப்பித்தன், விராலிமலை.

1. உயிர்தமிழ்க் கென்றும் உடல்தரைக் கென்றும்
உயர்வது வேளமக் கென்றும்
மயிர்முனை சிலிர்க்க மேடையில் முழங்கி
வகைவகை யாய்ப்பல எழுதிப்
பயிர்நிலம் மேயும் வேலிபோல் இன்று
பல்விளித் திழிசுவை விழைந்து
'வயிறுகள் காக்க' ஒருமைவாழ் கென்று
வடவர்வால் பிடிப்பவர் யாரோ?

2. தமிழினிற் குயர்வு செய்எழுத் தாளர்
தாமெனத் தாளிகை நடத்தி
அமிழ்தெனுந் தமிழில் பிறமொழிச் சொற்கள்
ஐம்பதும் அறுபதும் விரவத்
தமிழ்மொழி அழிகுங் கெடுமதிப் பார்ப்பார்
தாள்களைப் பணிந்தவர் திமிராய்
உமிழ்கின்ற அனைத்தும் அரசியல் உயர்வென்
றுண்மையைப் புதைப்பவர் யாரோ?

3 உள்ளமென் கோயிற் குழைப்பெனும் வழிபா
டியற்றுவம் தமிழ்முறை சிதைக்குங்
கள்ளர்வாழ் கோயிற் கதவெலாம் திறந்து
கல்விசேர்ப் போமென முழங்கிப்,
பள்ளியை அடைத்துத் தமிழ்க்குழந் தையர்தம்
குலத்தொழில் செய்கவென் றுதைத்துத்
தள்ளிய கயவர் துணையுடன் ஆளத்
தவங்கிடந் திழிபவர் யாரோ?

வெளிவருமாயின் பசிமிக்க ஒருவன் அரைவயிறு உண்ட நிறைவாவது ஏற்படும். எனவே மூன்று பாக்களாவது வெளியிட ஆவண செய்வீர்களா?

—பெ. ந. அருணன், எரங்காட்டுப்பாளையம், பு. புளியம்பட்டி.

'தென்மொழி' இழப்பில் நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் தாங்கள் அளப்பரும் துன்பத்தையும் தொல்லையையும் ஏற்று வருகிறீர்கள் என்பதையும் அறிய மனம் மிகுந்த வருத்தமடைகிறது. தென்மொழி, தமிழகத்தில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்து வருகிறது; தமிழர்கள் கட்சி, சமயம் ஆகியவற்றையும் கடந்து ஒன்றுபட வழியைக் காட்டிவருகிறது. இதை நான் வெறும் புகழ்ச்சிக்காகச்சொல்லவில்லை. தென்மொழியைப் படிக்கும்படி பல கட்சி நண்பர்கட்கும் நான் கொடுத்தேன். அவர்கள் கட்சியை மறந்து தென்மொழியின் மீது பற்றுக்கொண்டு விட்டனர்! இப்பொழுது அவர்களெல்லாரும் தென்மொழியைத் தொடர்ந்து படித்து வருகின்றனர். எங்கள் மாவட்டத்தில், அதிலும் குறிப்பாக அரூர் வட்டத்தில் தென்மொழியை விரும்பிப் படிப்பவர்கள் பெருகி வருகிறார்கள்.

தருமபுரி மாவட்டத்தில் தென்மொழியைப் பரப்ப நான் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுகிறேன். தாங்கள் பிற மாவட்டங்களிலுள்ள நண்பர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துப் பரப்பச் செய்யுங்கள். மாவட்டத்தில் சற்று செல்வாக்குடைய நண்பரைத் தலைவராக்கி, வட்டத்திற்குப் 10 நண்பர்களும் ஒன்றியத்திற்கு 5 நண்பர்களுஞ் சேர்த்துத் தென்மொழி வளர்ச்சிக்குழு அமைத்துப் பணியாற்றின் பயன் கிடைக்கும். தென்மொழியை எப்படியும் 5 ஆண்டுகளில் வலிவுடையதாக்கி விடவேண்டும். தென்மொழி வளர்ச்சி மாநாட்டை விரைவில் கூட்டினால் நலமாக இருக்கும். வளர்ச்சி பற்றிய அமைப்புக் குழுக்களை யமைத்துப் பணியாற்றலாம். உடனடியாக மாவட்டந் தோறும் வளர்ச்சிக் குழுக்களை அமைப்பது இன்றியமையாதது.

மனம் தளர்ச்சியுறாதீர்கள். ஆயிரக் கணக்கான மாணவர்களும் ஆசிரியர்களும் தங்களின் மீதும் தென்மொழியின் மீதும் அளப்பரிய பற்றுவைத்துள்ளனர். தமிழுக்காகவும், தமிழருக்காகவும் துன்பத்தை நாமே வலிந்து ஏற்றுக்கொள்ளுவோம். 'தென்மொழி' வளர்ச்சி பற்றி மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதை எனக்கு அறிவிக்க வேண்டுகிறேன்.

—மணிவேலன், இ. க; ஆ. ப. அரூர்.

அன்புள்ள ஐயா! வணக்கம் பல! சென்ற (மார்கழி-தை) தென்மொழி இதழில் வரையப்பட்டிருந்த ஆசிரிய வுரையைக் கண்ணுற்றேன். உரையின் கடைசிப் பகுதியில் தமிழக முதலமைச்சருக்கு விடுக்கப்பட்டிருக்கும் கோரிக்கையை ஏற்க என்மனம் ஒப்பவில்லை. காரணம்? மதிப்பிற்குரிய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஓர் இயக்கத்தின் தலைவர் மட்டுமல்லர். தமிழ்நாட்டின் முதலமைச்சர்.

அவர் பண்பாட்டுக்குறைவான செயல்களை வன்முறைச் செயல்களை, பொதுச் சொத்துச் சேதங்களை எப்படி ஏற்றுக்கொள்ள இயலும். அல்லது எப்படி வரவேற்க இயலும் என்பதை யான் அறியேன். தாங்கள் அறிந்திருந்தால் விளக்க வேண்டுகின்றேன். எல்லா நாட்டினரும் தமது உரிமைக்காக இதுபோன்ற செயல்களைச் செய்கின்றனர் என்றால் அதை நாமும் செய்ய வேண்டுமா? தாங்கள் அதை விரும்புகிறீர்களா? போராட்டம் தேவையெனின், அஃது ஏன் அறப்போராட்டமாக இருக்கக்கூடாது என்பதே என் வினா?

—ப. திராவிடமணி, சீராமபுரம், பெங்களூர்-21.

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

துரை-மாணிக்கம்

எழுதிய

தேவைக்கு முந்துக!

தனிப்படி உருபா, 1—00

அஞ்சல்வழி வேண்டுவோர் உருபா. 1-25 விடுக்க,

விளக்கங்களுக்கு,

தென்மொழி
கடலூர்-௧